கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

## Valampuri

ஆசியா கண்டத்தில் முதலாம்
தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமெந்து

04 வள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 14 புதன்கிழமை (01.10.2003) தொலைபேசி - 2223378 ஒலி 286

# டற்புலிகளின் அபரித வளர்ச்சியால் ந்தியாவுக்குப் பெரும் அச்சுறுத்தல்

### ந்நாட்டு முன்னாள் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருத்து

(கொழும்பு)

லங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான சமாதான நடவடிக் ல் இந்தியா கூடிய பங்களிப்பைச் வண்டியது அவசியம் என முன்னாள் வெளிவிவகார சின் செயலாளர் எம்.றக் தெரிவித்துள்ளார்.

ஒப்ஸவறி றிசேச் பௌண்டேசன் அமைப்பினால் ஒழுங்குசெய்யப்பட்ட "ஒருவருட சமாதான நடவடிக்கையின் பின்னர்" எனும் தலைப்பிலான கருத்தரங்கினை, சென்னையில் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழீழ விடுதலைப் புலிகள் பாக்கு நீரிணையில் மூன்றாவது கடற்படையாக உருவாகிவருவது இந்தியாவிற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தப்போகிறது.

இதேவேளை, அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஜப்பான் மற்றும் நோர்வே நாடுகள் பங்குபற்றி வருவது எனக்கு பெரும் அதிருப்தியை தந்துள்ளது.

குறிப்பாக ஜப்பான் இதன்மூலம் சர்வதேச பிரபலத்தைப் பெற்று ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் மனித எலும்புக்கூடுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் சிதைவுற்ற நிலையில் மனித எலும்புக் கூடுகள் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன..

கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிமனை வளாகத்தில் கட்டடப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு மண்ணகழ்வு வேலை இடமபெற்றபோதே இம் மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

1996 ஆம் ஆண்டு ஆனையிறவுப படைத்தளத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கைகளின் மூலம் கிளிநொச்சியை இராணுவம் கைப்பற்றிய போது, தமது வீடுகளைப் பார்வையிடச் சென்று காணாமல் போன பொதுமக்களின் உடைய எலும்புக்கூடுகளாக இவை இருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

# இடைக்கால சபையை புலிகளிடம் கையளிக்குக!

## அரசிடம் தமிழ்மக்கள் கூட்டாகக் கோரிக்கை

(நமது நிருபர்)

**யுத்தத்தினால் சீரழிந்துபோயுள்ள தமிழர் ாயகப் பிரதேசத்தை மீளக்கட்டியெழுப்பு ற்கு முறையான அதிகாரங்களை உள்ள கிய இடைக்கால நிர்வாகசபையை தமிழீழ டுதலைப் புலிகளிடம் உடனடியாகக் கைய க்குமாறும், அதனை விடுதலைப் புலிகள் றுக் கொள்ள வேண்டும் எனவும் தமிழ்மக் கோரிக்கைவிடுத்து வருகின்றனர்.**

க்குக் கிழக்கிற்கான அதி ள்ள இடைக்கால நிர்வாக ய தமிழீழ விடுதலைப் புலி கையளிக்கக்கூடாது என லங்கைப் பெரும்பான்மை பேரினவாதிகள் கூக்குரல் ம் வேளையில், அதிகாரம் இடைக்கால நிர்வாக சபையை லப் புலிகளிடம் ஒப்படைக்க ம் என தமிழர் தாயகப் பிர களின் குரல் ஓங்கி ஒலிக்க த்துள்ளது.

தமிழர் தாயகப் பிரதேசத்தில் குறிப்பாக யாழ். குடாநாட்டில் உள்ள பொது அமைப்புகள் வணிக மன்றங்கள் மாணவர் அமைப்புக்கள், கூட்டுறவு அமைப்புக்கள் உட்பட புத்திஜீவிகள், மதகுருமார்கள் எனப் பல்வேறு தரப்பினரும் அதிகாரமுள்ள இடைக்கால நிர்வாகசபையைத் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வழங்கவேண்டும் எனற கோரிக்கையை இலங்கை அரசு, நோர்வே

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திட்டவரைபை புலிகள் கையளித்ததும் சமாதானப் பேச்சுக்கள் தொடரும்

### நோர்வேத் தூதுவர் நம்பிக்கை தெரிவிப்பு

(அநுராதபுரம்)

வடக்கு - கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக விடுதலைப் புலிகள் தயாரித்துள்ள திட்டவரைபை அரசிடம் சமர்ப்பித்தவுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகும் என்று நோர்வேத் தூதுவர் ஹான் பாஸ்கற் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அநுராதபுர மாவட்ட பிரதேச செயலர் அலுவலகத்தில் நடைபெற்ற அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றும் போதே நோர்வேத் தூதுவர் ஹான் பாஸ்கற மேற்கண்டவாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நோர்வேயின் மத்தியஸ்தம் தேவை என ஜனாதிபதி சந்திரிகாவே முதன்முதலில் கோரிக்கை விடுத்திருந்தார். அதனடிப்படையில், தற்போதைய அரசாங்கமும், புலிகளும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றைக் காணும் நோக்குடன் நோர்வேக்கு அழைப்பு விடுத்திருந்தனர். இந்த அழைப்பையேற்று இனப்பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக நோர்வே முன்வந்துள்ளது.

சமாதான முயற்சியில் பெறுபேறுகள் தாமதமடையக்கூடும். ஆதலால் இரு தரப்பினரும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ரதமரைச் சந்திக்க ஜனாதிபதி மறுப்பு

(கொழும்பு)

க்கிய நாடுகள் சபையில் உரையாற்றிவிட்டு இலங்கை திரும்பிய ர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்திப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா துங்கா மறுப்புத் தெரிவித்துள்ளார்.

க்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்தில் விவாதிக்கப் விடயங்களை ஜனாதிபதிக்கு விளக்கிக் கூறுவதற்கு நேரம் த் தருமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கேட்டுக்கொண்டதற்கு திபதி மறுப்புத் தெரிவித்துள்ளதுடன், ஐக்கிய நாடுகள் பொதுச் பையில் விவாதிக்கப்பட்ட விடயங்களில் தனக்கு அக்கறை இல்லை ம், தனக்குப் பல முக்கிய வேலைகள் இருப்பதனால் தற் தக்கு சந்திப்பதற்குத் தனக்கு நேரமில்லை எனவும் ஜனாதிபதி ருக்கு அறிவித்துள்ளார். (வ)

வாழ்த்துகின்றோம்
இன்று (01.10.2003)
ஓராண்டை நிறைவு செய்து
இரண்டாவது ஆண்டில்
காலடி வைக்கும்
நமது ஈழநாடு
நாளிதழுக்கு எமது மனப்பூர்வமான
வாழ்த்துக்களைத் தெரிவித்து
மகிழ்கின்றோம்.
வலம்புரிக் குடும்பம்

## தேசாபிமான இயக்கத்தின் பாதயாத்திரை இன்று முடிவு

### கொழும்பு நகரில் விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

நாட்டுப்பற்றுடைய தேசாபிமான இயககம் ஏற்பாடு செய்திருந்த எழுச்சிப் பேரணியின் இறுதிக்கட்ட பாதயாத்திரை இன்று கொழும்பை வந்தடையவுள்ளது.

இதனால், கொழும்பு நகரில் விசேட பாதுகாப்பும், போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அல்பேர்ட் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இப்பேரணியால் கொழும்பு நகரில் ஏற்படக்கூடிய போக்குவரத்து நெரிசல்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் எழுச்சிப் பேரணி செல்லும் பேலியகொட பாதை தவிர்ந்த ஏனைய பாதைகளைப் பயன்படுத்துமாறு சாரதிகளை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பாதயாத்திரைப் பேரணி கொழும்பு லிங்கன் சதுக்கத்தை இன்று வந்தடையவிருப்பதால், பிற்பகல் 3 மணிக்குப் பின் அப்பாதையைப் பயன்படுத்த வேண்டாம் என்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கேட்டுக் கொண்டுள்ளார். (ம)

## சிறு விளம்பரம்


### O.L கணிதம்


கணித பாடத்தின் பெரும் பிரிவுகளான அட்சர கணிதம், கேத்திர கணிதம், எண்கணிதம், புதிய கணிதம் ஆகியவற்றின் சகல அலகுகளையும் 38வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் A பெறுபேறடைவதற்குக் கற்பிக்கப்படும். சந்திக்கும் நேரம் காலை 6.00 - 9.00 க.ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (7646)



## ஆண்டு விழா

பருத்தித்துறை தும்பளை விபுலானந்தா விளையாட்டுக்கழகத்தின் 30வது ஆண்டு விழா கடந்த ஞாயிறன்று யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி ப.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை வடமராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கான பரிசில்களை, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட காப்புறுதிக் கூட்டுத்தாபன முகாமையாளர் இராசரத்தினம் வழங்கினார். (உ-27)






சுகாதார சேவை ஊழியர்கள் கடந்த 12 தினங்களாக மேற்கொண்டு வந்த வேலை நிறுத்தப் போராட்டம் நேற்றுடன முடிவுக்கு வந்ததையடுத்து யாழ். போதனா வைத்தியசாலை பணிகள் வழமைக்குத் திரும்பியுள்ளன. (படங்கள்:ஜெ.ஜெராட்)

# காவமிட்ட கட்டளையை தமிழக அரசு தட்டிக் கழிக்கிறது

## கலைஞரிடம் சந்திரசேகரன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் இலங்கையின் பெரும்பான்மையான அரசியல் கட்சிகளும், உலக நாடுகளும் அக்கறை காட்டிச் செயற்பட்டுவரும் இந்த வேளையில், இந்திய மத்திய அரசாங்கமோ அல்லது தமிழக அரசோ இந்த விடயத்தில் பாராமுக்மாகச் செயற்பட்டுவருவது எமக்கு கவலையளிப்பதாக உள்ளது.

இது தமக்குள்ள வரலாற்றுக் கடமையை மறந்து செயற்படுவதற்கு ஒப்பானது என்று கடந்த ஞாயிறன்று கலைஞர் கருணாநிதியை சென்னையில் உள்ள அவரது இல்லத்தில் வைதது் சந்தித்த பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தொடர்ந்தும் அங்கு கருத்து வெளியிடுகையில்,

இலங்கைத் தமிழ் மக்களின அரசியல் பிரச்சினை என்பது தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல.

உலகம் முழுவதிலும் பரந்து வாழும் தமிழர்கள் ஒன்றுபட்டு மாபெரும் சக்தியாப் பரிணமிக்க வேண்டுமஎன்ற மனநிலை ஏற்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில், தமிழகத் தலைவர்கள், புறம்புகாட்டி நிற்பது மனவருத்தமளிக்கிறது.

இந்தக் கட்டத்தில் தமிழகத் தலைவர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது.

சமஷ்டி ஆட்சியை ஏற்றுக் கொளளும் அளவுக்கு விடுதலைப் புலிகள் வந்துள்ளனர். இது கூடச் சாத்தியமில்லையென்றால், 20 வருட யுத்ததில் இளைஞர்கள் புரிந்த உயிர்த் தியாகத்திற்கு அர்த்தமற்றுப் போய் விடும்.

காலத்தின் கட்டாயத்தை உணாந்து இலங்கைத் தமிழ் மக்களின் சுபீட்சமான அரசியல் எதிர்காலத்திற்காக கூடிய அக்கறையுடன் செயற்பட வேண்டும் எனக் கே[illegible]ங்கொண்டார். (உ)

## வறிய மாணவர்களுக்கு உதவுபொருட்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பரிஷ் லியோ கழக உறுப்பினர்களால் யா/கச்சாய் சத்தியம்மன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கு உதவு பொருட்கள் வழங்கப்படவுள்ளன. இதனடிப்படையில் எதிர்வரும் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை மேற்படி பாடசாலையில் கல்வி கற்கும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள், சப்பாத்துக்கள் மற்றும் பற்பசை ஆகியன வழங்கப் படவுள்ளதுடன் வறுமைக் கோட்டிற்குட்பட்ட ஊனமுற்ற மாணவி ஒருவரது பெயருக்கு 5000 ரூபா வங்கி வைப்பிலிட்டதற்கான சான்றிதழும் வழங்கப்படவுள்ளது. (உ-18)

## தமிழீழ சுகாதார சேவை

(புன்னாலைக்கட்டுவன்)

வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த உற்சவத்தின் போது ஆலய சுற்றாடலில் சுகாதாரத்தைப் பேணும் வகையில் தமிழீழ சுகாதார சேவையினர் சுகாதார கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொலித்தீன் பாவனையை மட்டுப்படுத்தும் பணிகளிலும் இவர்கள் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (உ-39)


## வட இலங்கைச் சங்கீத சபைப் பரீட்சைகள் 2004

வட இலங்கைச் சங்கீத சபையின் 2004 ஆம் ஆண்டு பரீட்சைக்கான ‘விண்ணப்பப்படிவங்கள் 2003.09.30 முதல் விற்பனைக்கு வந்துள்ளன. விண்ணப்ப முடிவுத்திகதி 2003.12.03. விண்ணப்பப்படிவம் ஒன்றின விலை அறிவுறுத்தல் பிரதியுடன் ரூபா.25.

விண்ணப்பப்படிவத்தைத் தபால் மூலம் பெற விரும்பும் தேர்வுநாடிகள் ரூபா25 பெறுமதியான காசுக்கட்டளை (Money Order) உடன் ரூபா 4.50 பெறுமதியான தபால் தலை ஒட்டிய சொந்த முகவரி எழுதப்பட்ட நீள் (10செ.மீ, 22செ.மீ) கடித உறையை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வுநாடிகள்,
வட. இலங்கை சங்கீத சபை,
யாழ்.கல்வி வலயம்,
செம்மணி வீதி, யாழ்ப்பாணம்.

என்ற இடத்தில் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம். (C-6719)



# உங்கள் வலம்புரியின் வாரமலர்

வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 20 விலை :-14.00

சங்கு நாதம்

(29 செப் -05 ஒக்டோபர் 2003) Sankunatham

சங்கு :-03 வள்ளுவர் ஆண்டு 2034 தொலைபேசி :- 2223378 நாதம் :-29

ஒன்று சேரும் முஸ்லிம்கள்




அரசியல் - அறிவியல் - ஆன்மீகம் அதுவே உங்கள் சங்குநாதம்.

விலை ரூபா 14.00

## சங்குநாதம்

- அமெரிக்காவின் ஆதிக்கத்திற்குள் அகப்பட்ட ஐ.நா. சபை -கோவையூர் ஜெயன்
- தமழக முதல்வர் ஜெயாவின் ஆட்சியில் கதிகலங்கும் அரசியல் தலைவர்கள் -டொறிங்ரன்
- முஸ்லிம் தலைவர்களின் கூட்டு சமாதானத்திற்கு வேட்டு. -விதுரன்
- திருகோணமலைத் துறைமுகத்தில் அமெரிக்காவின் கழுகுப்பார்வை - பவானி
- ஆலடி மாநாடு
- வியாசரின் பதில்கள்.
- செங்கை ஆழியானின் ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
- பொன்.கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 20 விலை :-14.00

சங்கு நாதம்

29செப். - 5ஒக்.2003 Sankunatham

# நாட்டின் பாதுகாப்பிற்காக எதையும் அர்ப்பணிக்க நான் தயாராகவுள்ளேன்

## அனுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் ஒருமைப்பாட்டிற்காகவும், பாதுகாப்பிற்காகவும் எந்தவொரு அர்ப்பணிப்பையும் செய்ய நான் தயாராக உள்ளேன்.

இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க நாட்டுப்பற்றுடைய தேசிய அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்றவரும் பாதயாத்திரை நேற்று முன்தினம் நிட்டம்புவ நகரை வந்தடைந்தபோது அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இவ்வாறு தெரிவித்தார்.



அக்கூட்டத்தில் தொடர்ந்தும் பேசிய அவர், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இடைக்கால நிர்வாகசபை என்ற பெயரில் விடுதலைப் புலிகளுக்கு நாட்டைத் தரைவார்க்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. இதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்.

அரசின் இம்முயற்சிகளை முறியடிப்பதற்காகவே பொ.ஐ.மு., மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டுச்சேர உத்தேசித்து, அதற்கான பேச்சுக்களும் நடைபெற்றுவந்தன.

எனினும், சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக அப்பேச்சுக்கள் இடையில் முறி வடைந்தன. ஆனால், இப்பேச்சுகளை மீண்டும் ஆரம்பித்து இரு கட்சிகளுக்கும் இடையே கூட்டமைப்பை ஏற்படுத்தும் முயற்சிகளில் தொடர்ந்தும் நாங்கள் ஈடுபட்டு வருகின்றோம்.

சமாதானம் என்ற போர்வையில் அரசாங்கத் தரப்புப் பிரதிநிதிகளும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்களை மேற்கொள்கின்றனர் என அவர் மேலும் குற்றஞ்சாட்டினர்(தி)

## மடகஸ்கார் வாகன விபத்தில் மாணிக்கக்கல் வியாபாரி மரணம்

(கொழும்பு)

மடகஸ்காரில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையைச் சேர்ந்த மாணிக்கக்கல் வியாபாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும், 4 இலங்கை இளைஞர்கள் இவ்விபத்தில் படுகாயமடைந்த நிலையில் மடகஸ்கார் மருத்துவமனையல் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் காவத்தையைச் சேர்ந்த முஸன் (வயது38) எனபரே உயிரிழந்தவராவார்.

(உ-10)

## உள்ளூர் சுற்றுலா மையங்களுக்கு விமானம் மூலம் சென்றுவர ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அதிகம் பார்வையிடுகின்ற பிரதேசங்களுக்கு அவர்களின் வசதி கருதி உள்ளூர் விமானங்களை இலங்கைச் சுற்றுலாத் துறையினர் சேவையிலீடுபடுத்தவுள்ளனர்.

சுற்றுலாத் துறையினரும் ஸ்ரீ லங்கா எயார்லைன்சும் இணைந்து இதனை மேற்கொள்ளவுள்ள மேற்படி விமான சேவை அடுத்தமாதம் முதல் அமுலுக்கு வரவுள்ளது.

திருகோணமலை, கந்தலம, கண்டி, நுவரெலியா, பெந்தோட்டை போன்ற முக்கிய இடங்களுக்கு மட்டுமே இச்சேவை வழங்கப்படவிருப்பதுடன், ஒருவழிப் பாதைக்கு 100 அமெரிக்க டொலர் அறிவிக்கப்படவுள்ளது.

வீதிவழியாக இவ்விடங்களுக்குச் செல்வதாயின் 3-8 மணித்தியாலங்கள் தேவைப்படும்., இவ்விமான சேவைமூலம் 20- 30 நிமிடங்களில் இவ் இடங்களுக்குச் செல்லக்கூடியதாய் இருக்கும்.

உல்லாசப் பயணிகளுக்கான இவ் உள்ளூர் விமானசேவையை லயன் எயார், செரண்டிப் எக்ஸ்பிரஸ், எக்ஸ் போ ஏவியேசன் போன்ற தனியார் துறை நிறுவனங்கள் இணைந்து நடத்தவுள்ளன.(உ-6)

## கண்காணிப்புக்குழுத் தலைவர் நோர்வே பயணமானார்

(கொழும்பு)

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் றிக்வே ரெலவ் நேற்று முன்தினம் நோர்வே சென்றுள்ளார்.

போர் நிறுத்தக் கண்காணிப்பு நடவடிக்கைகளின்போது, ஏற்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக நோர்வே அரசாங்கத்துடன் பேச்சுக்கள் நடத்தவே அவர் நோர்வே பயணமானார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் அங்கு செல்வதற்கு முன்னர், கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்து விசேட பேச்சுவார்த்தை ஒன்றினை நடத்தியிருந்தார்.

இச்சந்திப்பில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிக்கொடி ஏற்றுதல், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கண்காணிப்புக் குழுவின் நடமாட்டம் என்பன குறித்து ஆராயப்பட்டன.

இவர் தனது உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக்கொண்டு எதிர்வரும் 13 ஆம் திகதி நாடுதிரும்பவுள்ளார்.

(தி-61)

## கட்டற்ற மது விற்பனையால் குடும்பத் தலைவர்களிடையே குடிப்பழக்கம் அதிகரிப்பு

(மண்கும்பான்)

மண்கும்பான், அல்லைப்பிட்டி, ஆகிய கிராமங்களில் சட்டவிரோத மதுபான விற்பனை அதிகரித்து வருவதால், இப்பகுதி மக்கள் பலத்த சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

கட்டுப்பாடின்றித் தொடரும் மதுபான விற்பனையால் குடும்பத் தலைவர்கள் பலர் மதுவுக்கு அடிமையாகி வருவதால் குடும்பங்களில் வீண் குழப்பங்களும், பொருளாதாரப் பாதிப்புக்களும் ஏற்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தவிர இளம் சமூகத்தினிடையேயும் மதுபாவனை வேகமாகப் பரவும் சாத்தியக்கூறுகள் தென்படுவதாக இப்பகுதி சமூக நலன் விரும்பிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(உ-56)

## தும்பளை நலன்புரி நிலையத்தில் திலீபனின் நினைவு அனுஷ்டிப்பு

(பருத்தித்துறை)

நாகர் கோவில் மக்கள் இடம் பெயர்ந்து வாழும் தும்பளை லூர்த்து மாதா கோயில் முகாமில் தியாக தீபம் திலீபன் ஞாபகார்த்த இறுதி நாள் நிகழ்வுகள் கடந்த வெள்ளியன்று எஸ். ஆனந்தமூர்த்தி தலைமையில் நடைபெற்றன.

பொதுச் சுடரை வடமராட்சி வலய கல்விக் கழகப் பொறுப்பாளர் கி. தாயகனும், ஈகச்சுடரினை அரசியல் துறையைச் சேர்ந்த வனிதனும் ஏற்றினர்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் உறுப்பினர் அமுதாப், நாகர்கோவில் மகாவித்தியாலய அதிபர் என்.மகேந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.(உ-52)

## சிறுவர் முதியோர் தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்றத்தின் ஏற்பாட்டில் சர்வதேச முதியோர் தின நிகழ்வுகள் இன்று பி.ப.1.30 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், யாழ். மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

(உ-18)

★ ★ ★

(கந்தரோடை)

உடுவில் பிரதேச செயலகத்தில் சிறுவர், முதியோர் தின விழா இன்று பி.ப. 2.00 மணிக்கு உடுவில் பிரதேச செயலர் எஸ்.ஆர். ஜெயப்பிரகாசம் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலை நடனத்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சபா ஜெயராசா பிரதம விருந்தினராகவும், உடுவில் கோட்ட கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-108)

## தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி யாழ்ப்பாணம் கன்னாதிட்டியில் உள்ள மக்கள் வங்கியின் பிராந்தியத் தலைமைக் கேட்போர் கூடத்தில் மாணவர்களுக்கான ''தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறை'' இன்று புதன்கிழமை காலை 9.00 மணிக்கு மக்கள் வங்கி 'யாழ். பிராந்திய முகாமையாளர் மு.க.சிவபாதவிருதயர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

(உ-18)

## வாணி விழா

புன்னாலைக்கட்டுவன் கணேசா பாலர் பாடசாலையின் வாணிவிழா எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விக்னேஸ்வரா மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் சிறுவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (உ-39)

## நவராத்திரி பாமாலை

### ஆறாம் நாள்



### பொருட்செல்வம் ஈந்திடம்மா

செங்கமலத் திருப்பவளே எங்கள் தாயே
ஜெகமெல்லாம் உனைவணக்கம் செய்யும் காலம்
அங்கமெல்லாம் கிளர்ந்தெழுந்த ஆதங்கத்தால்
அடியேனும் வேண்டுகின்றேன் அன்புத்தாயே
பங்கமொன்றும் எனைவந்து சேரா வண்ணம்
பற்றுடனே உன்பார்வை எனக்கு வேண்டும்
பொங்குதமிழ் எழுச்சியுடன் தமிழர் வாழ
பொருட்செல்வம் ஈந்திடம்மா புவனம் போற்ற

ஜெ.நிரோஜா
*கலைக்கல்லூரி, மருதனார் மடம்.*

### அருள்வாய் அம்மா!

அம்மையே அன்பில் தோய்ந்த அறிவே
அடியவன் நான் வேண்டுகிறேனே
இம்மையில் ஈழத் தமிழினம் வாழ
அதய அருள் சுரந்திடு தாயே!

மனிதுரை மனிதர் தூற்றும் நிலை
மண்ணில் நீங்க அருள்தா அம்மா
புனிதும் மக்கள் வாழ்வில் பொலிய
புன்னகை தருவாய் இலக்குமியே

கணேசன் அருள்மதி
*யா/உடுவில் முருகமூர்த்தி, வித்தியாசாலை.*

### உன்காவல் உண்டு

பூவிற்கு மணமுண்டு
காற்றிற்குக் குணமுண்டு
வேலிக்குக் காவலுண்டு
தாலிக்கு வலுவுண்டு
நவராத்திரி நாயகியே
உன்காவல் உண்டு

கந்தராசா அனித்தா
*மானிப்பாய் மருதடி விநாயகர், அறநெறிப் பாடசாலை.*

### சுகங்கள் சூழ

பணத்தின் மீதே பற்றினை வைத்து
பாவை வாழ்வைக் குலைக்கும் ஆண்கள்
குணத்தை அழித்தே குவலயம் காப்பாய்
குன்றாம் மனத்தை அருள்வாய் அம்மா

இயந்திர வேக வாழ்க்கை எல்லாம்
இன்னும் இங்கே தேவையா அம்மா!
சுதந்திரமான சுகங்களெல்லாம் இங்கு
சூழட்டும் தாயே! தாயே!

சிவநாதன் நிரோஜா
*மானிப்பாய் மருதடி விநாயகர், அறநெறிப் பாடசாலை.*

## விசேட கொடுப்பனவு கோரி ஆர்ப்பாட்டம் செய்த தோட்டத் தொழிலாளர்கள் 7 பேரை பொலிஸார் சுட்டுக் கொன்றுள்ளனர்

### அசாம் மாநிலத்தில் சம்பவம்

(புதுடில்லி)

தீபாவளி விசேட கொடுப்பனவு கோரி ஆர்ப்பாட்டம் செய்த 7 தோட்டத் தொழிலாளர்கள் பொலிஸாரால் மூர்க்கத்தனமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் இந்தியாவில் அசாம் மாநிலத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

அதிகளவிலான தேயிலையை உற்பத்தி செய்யும் அசாம் மாநிலத்தில் வாழும் நூற்றுக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் தீபாவளி விசேட கொடுப்பனவு வழங்கக் கோரி நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை அடக்குவதற்கு பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 7 தோட்டத் தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தீபாவளிக்கான விசேட கொடுப்பனவை வழங்க முடியாது என்று தோட்ட உரிமையாளர்கள் கூறியதையடுத்தே தாம் ஆர்ப்பாட்ட நடவடிக்கையில் குதித்ததாக தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். (பி-2)

## சதாமுக்கு புற்றுநோய் விரைவில் இறப்பாராம்

(பரிஸ்)

ஈராக்கின் பதவி கவிழ்க்கப்பட்ட அதிபர் சதாம் ஹுசேனை அமெரிக்கப்படைகள் கண்டிருக்கிறார்களோ இல்லையோ அவர் வெகுகாலம் உயிர் வாழக்கூடிய நிலையில் இல்லை. புற்றுநோயால் வாடும் அவர் அந்நோயின் இறுதிக்கட்டத்தில் இருக்கிறார்.

இத்தகவலை பிரபல பாரிஸ் பத்திரிகையாளர் ஒருவர் வெளியிட்டுள்ளார். பிரஞ்சு உயர் மட்ட அரசியல் வட்டாரங்களோடு நெருங்கிய தொடர்புடையவர் என்று கருதப்படும் அப்பத்திரிகையாளர் சதாம் ஹுசேன் உடல்நிலை மிகமோசமான கட்டத்தை அடைந்திருப்பதாகவும் அதனால் அரபு நாடொன்றில் சிகிச்சை பெற்றுக் கொள்ள விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

சதாம் ஹுசேன் சரணடைய ஆயத்தமாகின்றார் என்றும் அவ்வாறு செய்வதற்கு சலுகையாக அவரை றியாத்தில் சிகிச்சைக்கு அனுமதிக்கும் வகையில் சவுதி அரேபியாவும் பிரான்சும் திட்டமொன்றைத் தீட்டி வருவதாகவும் அந்தப் பத்திரிகையாளர் மேலும் கூறியுள்ளார்.(பி)

## அமெரிக்க வாகனத் தொடரணி மீது தாக்குதல்; இராணுவ வீரர் பலி

(பக்தாத்)

ஈராக்கின் பக்தாத் நகரின் மேற்குப் பகுதியில் அமெரிக்க வாகனத் தொடர் அணியொன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட கெரில்லாத் தாக்குதலில் அமெரிக்க இராணுவ வீரர் ஒருவர் கொல்லப் பட்டதுடன் மற்றுமொரு இராணுவ வீரர் படுகாயமடைந்துள்ளார்.

பக்தாத்திலிருந்து 70 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஹாய்பானியா நகரில் இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாக அமெரிக்க இராணுவ லெப்டினன் கேணல் ஜோர்ச்கிர்லோ தெரிவித்தார்.

மே மாதம் முதலாம் திகதிக்கு பின்னர் இதுவரை இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் மற்றும் கெரில்லாத் தாக்குதல்களில் 81 அமெரிக்க இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாக இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.(பி-2)

## சர்வதேச நம்பிக்கையை கட்டியெழுப்பாவிடின் ஈரான் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும்

### ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை

(ப்ரூஸ்ஸெல்ஸ்)

ஈரான் அதன் அணுவாயுதத் திட்டம் தொடர்பில் சர்வதேச நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்பாது விட்டால் அதற்கெதிராக பொருளாதார நெருக்கடிகளைக் கொடுக்கப் போவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஈரான் அதன் அணுவாயுதத் திட்டம், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை, மனித உரிமைகள், மத்திய கிழக்கு சமாதான முயற்சிகள் ஆகிய சர்வதேச அக்கறை மிகு விடயங்களில் சாதகமான போக்கை காண்பிக்காவிடின் மிகப் பெறுமதிவாய்ந்த வர்த்தக உடன்படிக்கையை இழக்கும் சாத்தியம் ஏற்படலாம் என்று ஐரோப்பிய ஒன்றிய வெளிநாட்டு அமைச்சர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்த நான்கு விவகாரங்களிலும் முன்னேற்றம் காணப்பட்டால் மாத்திரமே ஈரானுடன் தீவிரமான பொருளாதார உறவுகளை மேற்கொள்ள முடியும் என்று ப்ரூஸ்ஸெல்ஸில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்தின் போது விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சர்வதேச அணுவாயுத பரிசோதகர்கள் ஈரானுக்குச் செல்லவிருப்பதை முன்னிட்டு தமது அணுவாயுத உற்பத்தித் திட்டங்களை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு ஈரான் அணுஉற்பத்தி தலைமையகம் உத்தரவு பிறப்பித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும். (2)

## நடுவானில் தீப்பிடித்த விமானம் அவசரமாக தரை இறக்கப்பட்டது

(புதுடில்லி)

டுபாயிலிருந்து சிங்கப்பூர் நோக்கிப் பயணமான விமானம் ஒன்று நடுவானில் தீப்பிடித்ததால் விமானம் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

தரையிறங்கிய விமானத்தில் எரிந்துகொண்டிருந்த தீயை சென்னை விமானநிலைய தீயணைப்புப் பிரிவினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இச்சம்பவத்தின் போது விமானத்தில் இருந்த அனைத்துப் பயணிகளும் பாதுகாப்பாகத் தரையிறக்கப்பட்டனர்.

இச்சம்பவம் காரணமாக சென்னை விமான நிலையத்தில் நேற்று முன்தினம் காலை சுமார் ஒரு மணிநேரம் பரபரப்பும் பதற்றமும் நிலவியது.

இவ்விமானத்தில் ஏற்பட்ட தீ விபத்திற்கு மின்சார ஒழுக்கே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (பி-2)

### உலக தரிசனம்

### உலகில் அதிகவயதான ஜப்பானியர் காலமானார்

(டோக்கியோ)

உலகிலேயே மிக நீண்டகாலம் உயிர்வாழ்ந்த ஆண்மகன் என்று கூறப்படும் நபர் காலமாகிவிட்டார்.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த இவா பட்டுப்பூச்சி வளர்க்கும் நிலையத்திலும், வங்கியொன்றிலும் கடமையாற்றி ஓய்வு பெற்ற 114 வயதான முதியவரே காலமானார்.

1889 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி பிறந்த இவர் நேற்று முன்தினம் மாலை அவரது படுக்கையறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார் என அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை,உலகிலேயே அதிக காலம் வாழ்ந்துவரும் பெண்ணும் ஜப்பானிலேயே வாழ்ந்து வருகின்றார். அவருக்கு 116 வயது.

(பி-2)

## முஸ்லிம்களுக்கு முஷாரப் துரோகமிழைத்துவிட்டார்

(இஸ்லாமாபாத்).

பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பை பதவி கவிழ்க்குமாறு அந்நாட்டவர்களை அல்கெய்டாத் தலைவரான ஆய்மான் அல் ஷபாஹிரி கேட்டுக் கொண்டுள்ளார்.

முஷாரப் முஸ்லிம்களுக்கு நம்பிக்கைத் துரோகம் இழைத்துள்ளதாக கூறியே ஷபாஹிரி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரபு விண்கலத் தொலைக்காட்சியின்மூலம் ஒளிபரப்பான நிகழ்ச்சியொன்றில் ஷபாஹிரியின் குரலை ஒத்ததான ஒலி நாடாமூலம் இந்தத்தகவல் வெளியிடப்பட்டதாக கூறப்படுகிறது.

இஸ்லாமையும் முஸ்லிம்களையும் வேரோடு அழிக்கும் நோக்கில் கிறிஸ்தவ லியோனிஷ வாதிகள் செயற்பட்டு வருவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

(பி-9)

## பஞ்சாயத்துக்காரர் தண்டனை வழங்குவதை தடுப்பதற்கு சட்டம் இயற்ற உச்ச நீதிமன்றம் வற்புறுத்து

(சென்னை)

பஞ்சாயத்துக்காரர்கள் தண்டனை வழங்குவதையும் அபராதம் விதிப்பதையும் தடுத்து நிறுத்தும் வகையில் அவசர சட்டம் ஒன்றை கொண்டு வரும் வகையில் சென்னை உச்ச நீதிமன்றம் தமிழ்நாடு அரசுக்கு யோசனை தெரிவித்துள்ளது.

பஞ்சாயத்தார் தம்மை நடத்திய விதம் குறித்து பெண் ஒருவர் தாக்கல் செய்திருக்கும் வழக்கை விசாரணை செய்த சென்னை நீதிமன்ற நீதிபதி கற்பக விநாயகம், காலம் காலமாக மக்கள் பஞ்சாயத்துக்காரர்களின் தீர்ப்பினால் பாதிக்கப்பட்டு வருபவர்களைக் கருத்தில் கொண்டே அவசர சட்டம் கொண்டு வரலாம் என்ற தமது யோசனை முன்வைக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கில் ஆஜரான அரச தரப்பு வழக்கறிஞர் என்.ஆர்.சந்திரன் நீதிமன்றத்தின் யோசனையை தமிழக அரசிற்கு எடுத்துக் கூறுவ[illegible]தாக தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் ஆங்காங்கே இயங்கிவரும் பஞ்சாயத்துக்கள் சில சமயங்களில் தான்தோன்றித்தனமாக நடந்துகொள்வதுடன், நடமுறைக்கு ஒவ்வாத தண்டனைகளை வழங்குவதும் பத்திரிகை செய்திகள்மூலம் தெரியவந்துள்ளது.

அண்மையில் தமிழ்நாட்டில் வலையப்பட்டி என்ற ஊரில் கணவனிடமிருந்து பிரிந்து வாழவிரும்பிய ஒரு பெண்ணை ஒருநாள் முழுவதும் தங்கள் காலில் விழுந்து கும்பிடும்படி அந்த ஊர் பஞ்சாயத்துக்காரர்கள் பணித்ததுடன் பெரும்தொகைப் பணத்தை தண்டமாக செலுத்தும்படியும் கட்டளையிட்டிருந்ததும் பின்னர் இந்த விவகாரம் பொலிஸார் மூலம் நீதிமன்ற விசாரணைக்கு வந்ததும் இது தொடர்பாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

(பி-2)

## கண்ணப்பனைக் கைது செய்யக் கோரும் ஜெயாவின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்

### பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய்

(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்து பேசியதற்காக இந்திய மத்திய இணை அமைச்சர் எம்.கண்ணப்பனை அமைச்சரவையிலிருந்து நீக்கக் கோரும் ஜெயலலிதாவின் கோரிக்கை குறித்து பரிசீலிக்கப்போவதாக இந்திய பிரதம மந்திரி அடல்பிஹாரி வாஜ்பாய் கூறியுள்ளார்.



உணவைத் தேடி குப்பை மேட்டுக்கு வந்த புள்ளிமான்கள். இடம் -சென்னை வேளச்சேரி நேரு நகர்.

தனது 13 நாள் வெளிநாடுகளுக்கான உத்தியோக பூர்வ சுற்றுப் பயணத்தை நிறைவு செய்து கொண்டு நாடு திரும்பியுள்ள பிரதமர், விமான நிலையத்தில் ஊடகவியலாளர்களிடம் பேசுகையிலேயே இவ்வாறு கூறினார்.

சென்னையில் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற புத்தக வெளியீட்டு விழா ஒன்றில், தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்து பேசினார் என்ற குற்றச்சாட்டில் எம்.கண்ணப்பனைக் பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப் போவதாக பிரதமர் வாஜ்பாய்க்கு, ஜெயலலிதா கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

இக்கடிதம் குறித்து பதிலளிக்கும் வகையிலேயே பிரதமர் ஊடகவியலாளர்களுக்கு மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்துள்ளார்.(பி-2)

## இருளில் மூழ்கிய இத்தாலிக்கு மீண்டும் மின்சாரம் விநியோகிக்கப்பட்டது

(ரோம்)

மின்சாரத் தடையினால் இருளில் மூழ்கிய இத்தாலியின் பெரும்பாலான பகுதிகளில் மீண்டும் மின்சாரம் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடஅமெரிக்காவிலும், கனடாவிலும் கடந்த மாதம் தடைப்பட்ட பாரிய மின்தடையை போன்றே இத்தாலியிலும் மின்சார விநியோகம் பாதிக்கப்பட்டது.

மின்தடை காரணமாக 57 மில்லியன் இத்தாலிய மக்கள் நேற்று முன்தினம் முழுவதும் மின்சாரம் இன்றி இருளில் மூழ்கியிருந்ததாக அறிவிக்கப்படுகின்றது.

நேற்றிரவு மின்விநியோகம் சிறுகசிறுக வழமைக்கு திரும்பிய போதும் இரயில் சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன.

சூறாவளி காரணமாக பிரான்ஸ், சுவிற்சலாந்து ஆகிய நாடுகளில் இருந்து இத்தாலிக்கு விநியோகிக்கப்படும் மின்சாரம் முழுஅளவில் துண்டிக்கப்பட்டதாக அதிகாரிகள் கூறினர்.

மின்சாரம் துண்டிக்கப்பட்டதன் காரணமாக 120 மில்லியன் யூரோ நட்டம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இறக்குமதி செய்யப்படும் மின்சாரம் துண்டிக்கப்பட்டதற்கான காரணத்தைக் கண்டறிய விசாரணை நடத்துமாறு இத்தாலியின் கைத்தொழில் அமைச்சர் அன்ரோனி யோமர்ஸானோ உத்தரவிட்டுள்ளார்.

(பி-9)

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

வினா இல. : 36 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

❖ எல்லா வினாக்களுக்கும் விடைதருக.

❖ **பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீ ழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

அல்லும் பகலும் வேலை செய்தும் அரை வயிற்றுக் கஞ்சிதானும் கிடையாமல் எத்தனையோ ஏழைகள் நோயாளிகளாக பிறரிடம் கையேந்தி வாழ்கின்றனர். அவர்கள் கையாலாகாதவர்கள் அல்லர். உழைப்பிலே ஊக்கமுடையவர். அவர்களின் அல்லல் நீங்க வேண்டுமானால் முதலில் உழைப்பிற்கேற்ற கூலி வழங்கப்படவேண்டும். அரசாங்கம் அவர்களுக்கு தகுந்த வேலைவாய்ப்பளித்து உணவு, உடை, உறையுள் என்பன வழங்க வேண்டும். அதனால் அவர்கள் துன்பம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கிவிடும். வீடும் நாடும் விறுவிறுவெனச் செழிப்படைந்துவிடும்.

01. இவ்வுரைப் பகுதியில் கூறப்பட்ட பிரதான கருத்து
(ஏழையின் கண்ணீர், உழைப்பின் உயர்வு, ஏழைகளுக்கு உதவுதல்)
02. அரைவயிற்றுக் கஞ்சி என்றால்
(போதிய உணவு, போதாத உணவு, நிறையுணவு)
03. கையேந்துதல் என்றால்
(தண்ணீர் குடித்தல், பிச்சை எடுத்தல், சண்டைபிடித்தல்)
04. நோயாளி என்பது
(ஆண்பால், பெண்பால், ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொது)
05. கையாலாகாதவர் என்றால்
(ஒரு தொழிலும் தெரியாதவர், கையில்லாதவர், நோயாளிகள்)
06. இங்கு கூறப்பட்ட ஏழைகள்
(சோம்பேறிகள், உழைப்பாளிகள், பிச்சைக்காரர்கள்)
07. மனிதனின் அத்தியாவசிய தேவைகள் எவை?
..........
08. இதில் வந்த இணைமொழிச்சொல் ஒன்று எழுதுக.
..........
09. இதில் வந்த ஒலிக் குறிப்புச் சொல் ஒன்று எழுதுக.
..........
10. இதில் வந்த உவமைத் தொடர் ஒன்று எழுதுக.
..........

❖ **பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஒத்த கருத் துள்ள சொற்களை எழுதுக.**

11. கூலி :---------- 12. உழைப்பு :----------
13. உறையுள் :---------- 14. செழிப்பு :----------

❖ **பின்வரும் சொற்களை பன்மைச் சொற்களாக்குக.**

15. வீடும் நாடும் :..........
16. அரசாங்கம் :..........
17. வாய்ப்பு :..........
18. வேலை :..........

❖ **முருகனது கடையில் 50 மாம்பழங்களும் 15தோடம் பழங்களும் 25 அப்பிள் பழங்களும் 20 தேங்காய்களும் 12 எலுமிச்சம் பழங்களும் இருந்தன.**
**ஒரு அப்பிள் வாங்கும் பணத்திற்கு 2 மாம்பழங்கள் வாங்க முடியும். தோடம் பழம் ஒன்றின் விலை அப்பிள் ஒன்றின் விலையை விட 5 ரூபா குறைவாகும். ஒரு தோடம்பழம் வாங்கும் பணத்தில் 2 தேங்காய்கள் வாங்கமுடியும். ஒரு தோடம்பழம் வாங்கும் பணத்தில் 5 எலுமிச்சம் பழங்களை வாங்க முடியும். அப்பிள் ஒன்றின் விலை ரூபா 20.00 ஆகும்.**

19. 5 அப்பிள்கள் வாங்க எவ்வளவு பணம் தேவை?
..........
20. மாம்பழம் ஒன்றின் விலை என்ன?
..........
21. சிந்து எலுமிச்சம் பழங்களை வாங்க 50 ரூபா வைத்திருக்கின்றார். முருகனின் கடையில் அவனால் எத்தனை எலுமிச்சம் பழங்களை வாங்க முடியும்?
..........
22. 8 மாம்பழங்கள் வாங்கும் பணத்திற்கு எத்தனை அப்பிள்கள் வாங்க முடியும்?
..........
23. 3 தோடம்பழங்கள், 3 தேங்காய்கள், 2 மாம்பழங்கள், 8 எலுமிச்சம் பழங்கள் வாங்க எவ்வளவு பணம் தேவை?
..........
24. முருகனது கடையில் இரண்டுவகையான அனைத்துப் பழங்களையும் வாங்கிக் கொண்டு பச்சை நிற(மயில்) காசுத்தாளைக் கொடுத்தால் மிகுதிப்பணம் கிடைக்காது எனின், அந்த இரண்டு வகையான பழத்தொகுதிகளும் எவை?
..........
25. குமார் முருகனது கடையில் மூன்று வகையான பழங்களை ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் வாங்கிக் கொண்டு 100.00 ரூபா கொடுத்தார். மீதி கிடைக்கவில்லை எனின் குமார் வாங்கிய பழங்களையும் அவற்றின் எண்ணிக்கையையும் காண்க.
..........
26. முருகனது கடையில் உள்ள பழங்களில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய் யப்படும் பழங்கள் எவை?
..........
27. உயிர்ச்சத்து 'சீ' உள்ள பழங்கள் எவை?
..........

❖ **பின்வரும் தமிழ்ச் சொற்களை ஆங்கல மொழியில் எழுதுக.**

28. அப்பிள்.......... 29. தோடம்பழம்..........
30. மாம்பழம்.......... 31. எலுமிச்சம் பழம்..........

❖ **பின்வரும் ஆங்கிலச் சொற்களைத் தமிழ் மொழியில் எழுதுக.**

**32. Shop.......... 33. Coconut..........**
**34. Rupee.......... 35. Price..........**

❖ **கீழே தரப்பட்டிருக்கும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைக் கூட்டுக் குள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.**

**வெப்பமானி, சூரியக்கலம், மின்னடுப்பு, யூரியா, பால், குறிஞ்சா, நெருஞ்சி, தொலைக்காட்சிப்பெட்டி**

36. மின்சக்தியை ஒளிசக்தியாகவும், ஒலிச்சக்தியாகவும் மாற்றும் சாதனம் எது?
..........
37. சூரிய ஒளியில் இருந்து மின்னை உருவாக்கும் உபகரணம் எது?
..........
38. இரசாயனப் பசளையாகப் பயன்படுத்தும் பொருள் எது?
..........
39. மின்சக்தியில் இருந்து வெப்பசக்தியைப் பெற உதவும் உபகரணம் ஒன்றின் பெயர் யாது?
..........
40. சூழலில் ஏற்படும் மாற்றம் ஒன்றை அளக்கப் பயன்படும் கருவி எது?
..........
41. விலங்கினால் பரவும் ஒரு வித்து எது? ..........
42. ஊட்டச்சத்து நிறைந்த ஓர் உணவுப்பொருள் எது?..........
43. காற்றினால் பரவும் வித்து எது?..........

44.



இவ்வுரு காட்டும் இசைக்கருவியின் பெயர் என்ன?
..........
45. இவ் இசைக்கருவியில் ஒலி ஏற்பட யாது செய்யவேண்டும்?
..........
46மேலே உள்ள இசைக் கருவியினால் ஒலி ஏற்படுவது?
1) கம்பி அதிர்வதன் மூலம் 2)வளி அதிர்வதன் மூலம்
3) படலம் அதிர்வதன் மூலம்

❖ **கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் முதல் நிரலில் சில பாடல்களின் முதலடி தரப்பட்டுள்ளது. இரண்டாவது நிரலில் அது எவ்வகைப் பாடல் என்பதை எழுதுக.**

**கும்மிப்பாடல், தாலாட்டுப்பாடல், கதைப்பாடல், தொழிற்பாடல்**

47) ஏலேலோ ஏலேலோ ஏலேலோ ..........
48) பாட்டியின் வீட்டுப் பழம்பானை ..........
49) ஆராரோ ஆரிவரோ ஆரடித்து நீயழுதாய் ..........
50) மங்கைய ரெல்லாம் வாருங்கடி ..........

❖ **பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

51) பாய்தலும், வீசுதலும் எவ்வகையான நிகழ்ச்சி என அழைக்கப்படும்
1)மைதான 2)சுவட்டு 3) பாய்தல்
52) சுவட்டு நிகழ்ச்சியாகக் கருதப்படுவது
1) உயரம்பாய்தல் 2) 100 மீற்றர் ஓட்டம் 3) பந்தெறிதல்
53) கைக்குட்டை ஒன்றில் வரைந்த பூவொன்றைத் தைப்பதற்குப் பொருத்தமான தையல் வகை
1) சிறுநூலோடல் 2) பெரியநூலோடல் 3) கம்பளித்தையல்
54) பச்சை வர்ணம் பெறுவதற்கு மஞ்சள் வர்ணத்துடன் கலக்கப்படவேண்டிய வர்ணம்
1) சிவப்பு 2) நீலம் 3) கறுப்பு
55) செதுக்கல் வகைஆக்கங்கள் செய்வதற்குப் பொருத்தமற்றது.
1) நிறக்கடதாசி 2) களிமண் 3) சவர்க்காரம்
56) ஒட்டுச் சித்திரம் (கொலாஜ்) செய்வதற்குப் பொருத்தமல்லாத பொருள்
1) வீசியெறியும் பொருள்
2) சுற்றாடலில்இருந்து இலகுவாகக் கிடைக்கும் பொருள்
3) கடையில் இருந்து வாங்கிய பெறுமதி மிக்க பொருள்
57) நீரைப் பயன்படுத்தி இசை எழுப்பும் கருவி
1) ஜலதலரங்கம் 2) மகுடி 3) புல்லாங்குழல்
58) திஸ்ரநடை எந்தப்பாடத்திற்குரியது
1) சங்கீதம் 2) நடனம் 3) சித்திரம்

❖ **கீழே நவீன விளையாட்டுக்கள்/பொருட்கள் தரப்பட்டள்ளன. அவற்றை இனம்கண்டு எழுதுக.**

59.  ----------
60.  ----------
61.  ----------
62.  ----------
63.  ----------

❖ **சரியான விடையைத் தெரிந்தெழுதுக**


**சிவப்புச் சிலுவை, மஞ்சள் கோடுகள், பச்சை ஒளி, சிவப்பு ஒளி, செம்மஞ்சள் ஒளி**

64. வாகனங்கள் நிறுத்தப்படவேண்டும் ..........
65. வாகனத்தை நிறுத்த வேண்டும், பச்சை விளக்கு எரிந்ததும் வாகனத்தை ஓட்டத் தயாராக இருக்கவேண்டும் ..........
66. வாகனத்தைச் செலுத்தலாம் ..........
67. மருத்துவமனை ..........
68. வீதியைக் கடக்கும் இடம் ..........

❖ **பொருத்தமான விடையை எழுதுக.**

69. உடலில் உள்ள கழிவகற்றும் உறுப்புக்களில் ஒன்று ..........
70. சமிபாடு தொடர்பான முக்கிய உறுப்பு ..........
71. சுவாசம் தொடர்பான முக்கிய உறுப்பு ..........
72. இரத்தோட்டம் தொடர்பான முக்கிய உறுப்பு ..........

❖ **தரம் 5இல் கல்வி கற்கும் பிள்ளை ஒன்று ஆரம்ப விஞ்ஞான பாடத்தில் செய்த பரிசோதனையை இப்படம் காட்டுகிறது. இதில் ஆங்கில எழுத்துக்களால் காட் டப்பட்டுள்ள பகுதியின் பெயர்களைக் குறிக்குக.**




73. **A**..........
74. **B**..........
75. கம்பி சூடாகும்போது என்ன மாற்றத்தை அவதானிப்பீர்
..........

❖ 'புலமைப் பரிசில்பரீட்சையில் தோற்றிய நாள்....' **என்னும்** தலைப்பில் சரியான எழுவாய் பயனிலையுடன் அமைந்த 6 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.

76..........
77..........
78..........
79..........
80..........
81..........

**5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள்—36**

மாணவர்முழுப்பெயர்: ..........
பாடசாலையின் பெயர்:..........
வீட்டின் முகவரி:..........

**மாணவர்களே! உங்கள் விடைகளை 08.10.2003இற்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.**

குறிப்பு:-மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத் தாள்களை வைத்துக் கொண்டு, வினாக் களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாக குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

**வலம்புரி**
**கல்விப்பகுதி,**
**15,வெள்ளாந் தெரு,**
**யாழ்ப்பாணம்.**

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

வினா இல: 34

### கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர்கள் பெயர் விபரம் வருமாறு:

01. க. கலீபன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
02. த. ரகுபரன்- புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி
03. இ. இராஜப்பிரசாந்- மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை
04. இ. இராஜப்பிரவிந்தன்- மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை
05. த. கிருத்திகா- வரணி மகாவித்தியாலயம்
06. த. நீருஜா- வல்வை றோ.க.த.க.பாடசாலை
07. ம. சிவறோஜன்- வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி
08. நா. சிவனியா- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
09. அ. பவித்திரா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
10. கு. உஷ்சாந்தி- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
11. ம. உசாந்தி- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
12. வி. அமலா- நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்
13. இ. டணசிகா- ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயம்
14. ஆ. நிரோஜினி- நவாலி சென்பீற்றேஸ் றோ.க.த.க பாடசாலை
15. து. வைஷ்ணவி- ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை
16. ம. துவாரகன்- உடுவில் மகளிர் கல்லூரி
17. நா. தர்சிகா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
18. செ. கலிஸ்ரா- நவாலி சென்பீற்றேஸ் றோ.க.த.க பாடசாலை
19. அ. அகல்யா- சுன்னாகம் றோ.க.த.க.பாடசாலை
20. நா. தேனுயா- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
21. கே. சோபனா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
22. க. சிந்துஜா- துன்னாலை த.க.பாடசாலை
23. இ. அனுஷா- கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்
24. ந. நக்கீரன் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
25. சு. கீர்த்தனா- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
26. மு. பிருந்தா- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
27. க. விதுஷா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
28. பூ. திலக்ஷி- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
29. பா. துஷாந்- யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்
30. இ. கீர்த்தனா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
31. வி. துஷ்யந்தன் நயினை நாகபூசணி வித்தியாலயம்
32. த. தனுஜன்- புற்றளை மகாவித்தியாலயம்
33. ச. சுவஸ்திகா- இருபாலை சீ.சீ.த.க.பாடசாலை
34. அ. தவக்குமார்- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
35. செ. ஜனகன்- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
36. நா. கார்த்திகா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
37. ம. இந்துஷா- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
38. க. குகதர்சினி- அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை
39. இ. பவீசன்- உடுவில் மகளிர் கல்லூரி
40. ச. ஜயகணேஷ்- கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
41. சி. டினோஜன்- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
42. ச. அருண்- இணுவில் மத்திய கல்லூரி
43. த. பிரியந்தி- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
44. வே. சரண்ணி- யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
45. ஞா. தாரணி- யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
46. சி. தர்ஸிகா- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
47. சி. துளசிகா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
48. ச. கலைச்செல்வன் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
49. கி. தீபிகா- இணுவில் இந்துக்கல்லூரி
50. யோ. விதுஷ்ஷன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
51. க. விபிஜா- ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை
52. சி. மயூரதன்- உரும்பிராய் அ.மி.கல்லூரி
53. யோ. துஷிகன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
54. பா. சாஜினி- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
55. எஸ். சிவதர்சி- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
56. லி. கரூஷன்- இணுவில் மத்திய கல்லூரி
57. ம. கீர்த்திகன்- இணுவில் மத்திய கல்லூரி
58. த. கௌரி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
59. ச. லசிகலா- யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்
60. மா. நிரோஜி- யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
61. கு. ஜெய்சினி- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
62. செ. சாருகா- மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
63. ஜெ .நிரோஜினி- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
64. க. விஸ்ணுவர்த்தன்- யா/பரியோவான் கல்லூரி
65. பி. யோபிதா- வல்வை சிவகுருநாத வித்தியாசாலை
66. இ. சகிலா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
67. சி. கனிஷ்ஸா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
68. பே. கலையரசன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
69. சி. நிலக்ஷன்- மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை
70. வே. நிருஜன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
71. இ. நிவேதா-ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
72. மி. வினுஷா- வேலணை நடராஜ வித்தியாலயம்
73. பா. சந்திரா- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
74. சி. ஜோதிகா- யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
75. கி. அபிசுஜா- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
76. சி. பிருந்தினி- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
77. ச. சுவீபன்- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
78. ர. யதுர்சன்- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
79. கு. மதிவாணி- கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
80. ஈ. கோபிதன்- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
81. த. தனுசியா- வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
82. த. தனுஷ்யா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
83. ச. நந்துஜா- யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்
84. ச. கோபிகா- துன்னாலை மெ.மி.த.க.பாடசாலை
85. சா. ஆதவன்- நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை
86. ஸ்ரீ. நீரஜா- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
87. பி. நந்தினி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
88. செ. வினோதா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
89. செ. திருக்குமரன்- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
90. கு. கோபிராம்- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
91. ஜி. அபர்ணா- கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
92. எஸ். சரணிகா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
93. மு. நிரோஜா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
94. பொ. கோகிலன்- மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை
95. செ. கலையரசி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
96. ச. ஷண்மதுரன்- சுழிபுரம் ஐக்கியசங்க சைவ வித்தியாசாலை
[illegible] ச. நியோசன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
98. ம. கம்சா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
99. அ. ராஜ்ஹரன்- கரணவாய் விக்கினேஸ்வராக் கல்லூரி
100. இ. பிரியங்கா- துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
101. க. செல்வி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
102. அ. ஜனதன்- யா/பரியோவான் கல்லூரி
103. வி. விதுர்சனா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
104. ம. பிரவீணா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
105. யோ. சரண்யா- சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயம்
106. ர. சாம்பவி- மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
107. செ. துவாரகன்- நல்லூர் ஸ்ரீவிக்கினேஸ்வரா வித்தியாலயம்
108. யோ. டினோஜன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
109. இ. வித்தியாகரன்- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
110. ர. மயூரி- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
111. க. நிசாந்தன்- கரந்தன் மாணிக்கவாசக வித்தியாலயம்
112. பா. அனுசியா- கரந்தன் மாணிக்கவாசக வித்தியாலயம்
113. பு. கிருசா- நவாலி மகாவித்தியாலயம்
114. ச. சஞ்சயன்- மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம்
115. த. விஜிதன்- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
116. க. கரிசினி- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
117. த. ரூசிகா- இணுவில் மத்திய கல்லூரி
118. த. சுகன்யா- நல்லூர் ஸ்ரீவிக்கினேஸ்வரா வித்தியாலயம்
119. ஜெ. கீர்த்திகா- நல்லூர் ஸ்ரீவிக்கினேஸ்வரா வித்தியாலயம்
120. சி. லனுஜா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
121. சு. அருளினி- உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
122. ஆ. கஜீபன்- யா/மத்திய கல்லூரி
123. கோ. பிரதீபா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
124. உ. டென்சிகா -ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை
125. சீ. சுஜீபனா- அச்சுவேலி மத்திய கல்லூரி
126. த. கோபிகா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
127. அ. பிறேமி- உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
128. செ. தஸ்மளா- நல்லூர் ஸ்ரீவிக்கினேஸ்வரா வித்தியாலயம்
129. மோ. சோதீபன்- மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை
130. கு. சர்மிளா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
131. ந. லோஜிதன்- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
132. செ. அருள்ராஜ்- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
133. கீ. அச்சுதன்- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
134. ந. துஷ்யந்தன்- நவாலி சென்பீற்றேஸ் றோ.க.த.க. பாடசாலை
135. இ. அனோஜிதா- உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
136. இ. கிரிசாந்- யா/ மத்திய கல்லூரி
137. சி. கெஜரூபன்- தாவடி இ.த.க.பாடசாலை
138. சி. தர்சிகா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
139. தெ. வினோஜ்காந்- யா/ மத்திய கல்லூரி
140. த. சிவதாஸ் -கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
141. செ. ஆருணன்- மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
142. ம. சரண்யா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
143. த. தபோஜனன்- இணுவில் மத்திய கல்லூரி
144. ச. லக்ஷிகா- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
145. மு. பிரவீணா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
146. கு. கிதுர்ஷன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
147. நே. லாவண்யன்- தாவடி இ.த.க.பாடசாலை
148. ம. ஜனனி- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
149. சி. கேமாவதி- அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
150. கி. தேனுகா- சாவகச்சேரி மகளிர் கல்லூரி
151. ச. அனுஷா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
152. மோ. தாட்சாயினி- நல்லூர் ஸ்ரீவிக்கினேஸ்வரா வித்தியாலயம்
153. நா. பிரணவன்- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
154. அ. கனிஷ்ரா- உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
155. ர. வினோஜினி- கொட்டடி நமசிவாய மகாவித்தியாலயம்
156. ச. அனுஷா- சுழிபுரம் ஐக்கியசங்க சைவ வித்தியாசாலை
157. சோ. தனஞ்சயன்-தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை
158. செ. றகீம்டிநெல்சன்- உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
159. பா. கிறிஸ்ரின்வேணி- உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
160. கா. கஜீபன்- நல்லூர் ஸ்ரீவிக்கினேஸ்வராக் கல்லூரி
161. சி. கௌதமி- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
162. த. நிரோசன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
163. த. சர்மிலன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
164. எஸ். பாலசேனானி- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
165. ஜெ. கீர்த்தனா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
166. க. அனுசியன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
167. நா. நளாயினி- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
168. பி. டிபன்ராஜ்- உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
169. ஜெ. பார்த்தீபா- நல்லூர் ஸ்ரீவிக்கினேஸ்வரா வித்தியாலயம்
170. எஸ். ஜெனூறன்- நல்லூர் ஸ்ரீவிக்கினேஸ்வரா வித்தியாலயம்
171. க. சகாதேவன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை

### வினாத்தாள் 34-ன் விடைகள்

01. தமிழர்
02. சிங்களவர்
03. பறங்கியர்
04. முஸ்லிம்கள்
05. இந்து சமயம்
06. பௌத்த சமயம்
07. றோமன் கத்தோலிக்க சமயம்
08. இஸ்லாம் சமயம்
09. உரு (2)
10. உரு (3)
11. உரு (4)
12. உரு (1)
13. வியாபாரம்
14. போத்துக்கீசர்,ஒல்லாந்தர், பிரித்தானியர்
15. 1948-02-04
16. இயக்கர், நாகர்/வேடர்
17. மகாவம்சம்
18. வாழைச்சேனை,எம்பிலிப்பிட்டிய
19. ஜின்தோட்டை
20. 100
21. 300 22. 25 23. 60Cm
24. 240Cm. 25. 70 26. 140
27. 07 28. 12.00/-
29. ரூபா. 9.25
30. 3006.25/-
31. (3) 32. (3) 33. (4)
34. (4) 35. (1) 36. 13
37. 6 38. 4 39. 9
40. 28 41. 33 42. 21
43. சரி
44. கூறலாம்
45. கூறலாம்
46. (3)
47 (3)
48 (1)
49 (3)
50 (3)
51. ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை...
52 சிறு நண்டு மணல் மீது...
53. காடுகள் பற்றைகள் வெட்டினோம்..
54. ஆண்பனையின் நுங்கே...
55. தைத்திருநாள் இல்லமெல்லாம்...
56. உலகத்து நாயகியே...
57. பந்தொறிந்தாட எல்லோரும்
58. பவள மேனியனான வயலில் நாற்றை...
59. காற்பந்தாட்டம்
60. பூப்பந்தாட்டம்
61. ச
62 சா
63. அழகு
64. நிழல்
65. குளிர்மை
66. பழங்கள்
67. மரம்
68. பழம்
69. மலர்
70. நாடு
71. **Beauty**
72. **Milk**
73. **Teacher**
74. **Parrot**
75. **Jungle**

76.-81 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான எழுவாய், பயனிலையுடன் அமைந்த 6வாக்கியங்கள் எழுதப்படல் வேண்டும். ஒவ்வொரு வாக்கியமும் ஆகக் குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருத்தல் வேண்டும்.

---

**யுன்.என்.டி.பி.நிறுவனம் குடாநாட்டில் அமுல்படுத்தியுள்ள**

# சுழற்சி முறைக் கடன் திட்டத்திற்கு சுமார் உகோடி ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மீளக் குடியமர்ந்த மக்களின் பொருளாதார வாழ்வைக்கட்டியெழுப்பும் வகையில், அவுஸ்திரேலிய அரசின் அனுசரணையுடன் இயங்கி வரும் யு.என்.டி.பி. நிறுவனமானது இதுவரை ஒரு கோடியே 91இலட்சத்து 50ஆயிரம் ரூபாவை சுழற்சி முறைக் கடனாக வழங்கியுள்ளது.

1999ஆம் ஆண்டுமுதல் யாழ். மாவட்டத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக அமுல் படுத்தப்பட்டு வரும் இச் சுழற்சி முறைக் கடன் திட்டமானது 3 கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதில் முதற்கட்டமாக, அளவெட்டி, மல்லாகம், அச்சுவேலி, சுன்னாகம், பண்டத்தரிப்பு,தெல்லிப்பழை, நெடுந்தீவு, காரைநகர், ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, நயினாதீவு, வேலணை, ஆகிய 10 பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களின் எல்லைப் பரப்பில் வசிக்கும்326 பயனாளிகளுக்கு ஒரு கோடியே 19இலட்சம ரூபா சுழற்சி முறைக்கடனாக வழங்கப்பட்டது

இரண்டாவது கட்டமாக, நீர்வேலி, உடுப்பிட்டி, நல்லூர், கைதடி, சங்கானை,மானிப்பாய், கட்டைவேலி ஆகிய 7 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் எல்லைப்பரப்பில் வசிக்கும் 605 பயனாளிகளுக்கு 35 இலட்சம் ரூபா வழங்கப்பட்டது.

மூன்றாவது கட்டமாக, சாவகச்சேரி, கொடிகாமம், மருதங்கேணி, பருத்தித்துறை, புலோலி, யாழ்ப்பாணம் ஆகிய 6 பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு 37 இலட்சத்து 150 ஆயிரம் ரூபா வழங்கப் படவுள்ளது.

இவ்வாறு கூட்டுறவுத் திணைக்களத்துடன் பின்னிப்பிணைந்து செயற்பட்டு வரும் யு.என்.டி.பி. நிறுவனமானது, கூட்டுறவுத் திணைக்களச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக 10 கணனிகள், நிழற்பிரதி இயந்திரம்,மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றை வழங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

# மீனவர்கள் நலன் கருதி புதிய வீதி அமைப்பு

(கந்தர்மடம்)

உலக உணவுத்திட்டத்தின் நிதி அனுசரணையுடன் மண்கும்பான்-ஊர்காவற்றுறை வீதியில் 5ஆம் கடடையடியிலிருந்து கடற்கரைக்குச் செல்வதற்கு சுமார் 2கிலோமீற்றர் நீளமான வீது புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது.

அப்பகுதியைச் சேர்ந்த சுமார் 50ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் மேற்படி வீதியமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்

அதேவேளை, மீன்பிடித் தொழிலுக்குச் செல்வோர் மழைக் காலத்தில் கடலுக்குச் செல்ல ஏற்ற பாதையின்றி பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வந்ததையடுத்தே, தற்போது உலக உணவுத் திட்டம் அப்பகுதி மக்களின் உதவியுடன் இப்புதிய வீதியமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-112)

## இன்னும் ஒரு தகவல்

# நேர்முகத்தேர்வு!

ஒரு இடத்தில் வேலைக்கான நேர்முகத்தேர்வு நடந்து கொண்டிருந்தது. அதுவும் அந்த நிறுவனத்தின் மாடியில் நடந்து கொண்டிருந்தது. எல்லோரும் மாடிப்படிகளில் ஏறி மேலே சென்றார்கள். முதல் நபரை தேர்விற்குக்கூப்பிட்டனர். அவரிடம் கேட்ட முதல் கேள்வி இதுதான். அதாவது ''இப்போது நீங்கள் எத்தனை படிகள் ஏறி வந்தீர்கள்?'' அவர் ஏனைய எல்லாவற்றையும் தயார் செய்து கொண்டு தான் போனார். ஆனால் படிக்கட்டை எண்ண வேண்டும் என்று அவருக்குத் தோன்றவில்லை. ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததோ இதனை ! இந்த மாதிரி ஏதாவது குறிக்கோளை வைத்துத்தான் தேர்வில் தேர்ந்தெடுப்பார்கள். நாம் எல்லாவற்றுக்குமே தயாராக இருக்க வேண்டும்.

புத்திசாலித்தனத்தை மிக அதிகமாக எதிர்பார்ப்பார்கள். நமக்கு வரப்போகும் பணியாளர் புத்திசாலித்தனத்துடன் இருப்பாரா? என்று எதிர்பார்ப்பார்கள்! அதனைச் சோதிப்பதற்குத்தான் படிகளை எண்ணிவிட்டு வந்தீர்களா? என்று கோட்பார்கள். இதற்கு ஒருவர் சரியாகக் கூறிவிட்டார். உடனே அவருக்கு வேலையும் கொடுத்து விட்டார்கள். இந்த அளவுக்கு நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

பொதுவாக இதுபோன்ற நேர்முகத்தேர்வுகளுக்குப் போகும்போது எம்மிடம் எவ்வாறானவற்றை எதிர்பார்ப்பார்கள் என்று ஒரு புத்தகத்தில் பட்டியல் போட்டிருக்கின்றார்கள். அதில் மிகவும் முக்கியமானது புத்திசாலித்தனம்.

புத்திசாலித்தனம் எமக்கு மிகவும் அவசியமானது. வேலைக்காக இல்லாவிட்டாலும்கூட எமக்கு அது மிகவும் தேவைப்படும். அதற்கு அடுத்து அவர்கள் எதிர்பார்ப்பது தொடர்பு கொள்ளும் திறமை! மற்றவர்களுடன் கலந்துரையாடி அவர்களைக் கவர்ந்து தன்னுடைய பணியைச் சிறப்பாகச் செய்யவேண்டும். தன்னுடன் கடமையாற்றுபவர்கள், அலுவலகத்திற்கு வருபவர்கள். அல்லது நாம் தொடர்பு கொள்ளவேண்டியவர்கள். இவர்களிடம் நாம் எப்படியான அணுகுமுறை வைத்திருக்கின்றோம், எந்த மொழியில் பேசுகின்றோம்? கனிவான மொழியில் எப்படிப் பேசுகின்றோம். இவ்வாறான தொடர்புகொள்ளும் ஆற்றல் இதனையும் கவனிக்கின்றனர்.

அடுத்து தன்னம்பிக்கை இருக்கின்றதா என்று பார்ப்பார்கள். அதற்கு ஏற்றாற்போல் சில கேள்விகளும் வரும். தன்னம்பிக்கை உணர்ச்சி மிகவும் அவசியம் தேவைப்படுகின்றது. ஒரு பணியாளரைத் தேடும்போது இதனை முக்கியமாகக் கவனிக்கின்றார்கள்.

அடுத்ததாகப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல். ஒரு பொறுப்பைத் திடீரென்று தரும்போது அதிகமான பொறுப்பைத் தருகின்றார்களே என்று சலிப்படைவதை விட அவற்றை நிறைவேற்றிக்காட்டும் ஆற்றல் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட எண்ணம் இவருக்கு உள்ளதா என்றும் பரிசோதித்துப் பார்ப்பார்கள்.

அடுத்து எமக்குத் தரப்படும் வேலையை மட்டும் செய்தால் போதும் என்று எண்ணுவதைவிட நாமாகவே சில வேலைகளை எடுத்துச் செய்யவேண்டும். இதுவே அதிகமாக எதிர்பார்க்கும் ஒரு குணம். நாமாகவே மேலிடத்திற்குச் சில ஆலோசனைகளைச் சொல்வது அவற்றை நிறைவேற்றிக் காட்டுவதனால் ஏற்படக்கூடிய நன்மைகளைப் பட்டியலிட்டுக் கொடுப்பது. அதனால் வரும் இலாபத்தைக்கணக்கிட்டுக்காட்டுவது போன்ற பணிகளை தாமாகவே செய்து காட்டுவது என்பனவும் முக்கியம்.

அதன் பின் முக்கியமான பண்பு தலைமைத்துவம். படைப்பாற்றல் ,கற்பனை வளம் ,ஒரு பிரச்சினையைப் பல கோணங்களில் நினைத்துப் பார்ப்பது அதற்குச் சரியான தீர்வு எப்படி இருக்கும் என்று இவற்றை எண்ணிப் பார்த்தல். வேலைக்காக இல்லாவிட்டாலும் கூட வாழ்க்கைக்குத் தேவைப்படுகின்றது.

இவற்றை விடவும் மிகவும் முக்கியமானது வளைந்து கொடுப்பது. எப்போது வளைந்து நிற்கலாம்?எப்போது நிமிர்ந்து நிற்கலாம்? என்று சரியாகத் தெரிந்து வைத்துக் கொள்ளவேண்டும். இல்லையேல் வாழ்வில் பிரச்சினை தான்.

அடுத்தது தன் கீழ் வேலை செய்யும் பணியாளர்களின் திறமைகளை வெளிக்கொணர்தல். யாரிடம் என்ன திறமை உண்டென்று கண்டுபிடித்து அவற்றை பயன்படுத்துவது ஒரு பெரிய ஆற்றல் . அடுத்து எமக்கென்று சுய சிந்தனையை வளர்த்துக்கொள்ளவேண்டும். இப்படி ஆற்றல்களை வளர்த்துக் கொள்பவர்கள்தான் ஒரு நிறுவனத்தின் வெற்றிக்குப் பாடுபட முடியும். இவற்றை விட குறிக்கோளை அடைதல் என்பது முக்கியமான பண்பு.

இதேபோல் ஓரிடத்தில் நேர்முகத்தேர்விற்காகப் பலர் காத்திருக்கின்றார்கள். அவர்களில் ஒருவர் மட்டும் தனியாக உட்கார்ந்திருந்தார். அங்கு வந்திருந்தவர்களிலிருந்து ஒருவரை அழைத்துக் கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார். அவரும் இவர்தான் நேர் முகப் பரீட்சை நடத்துகின்றார் என்று விடைகளைக் கூறினார். வேறு ஒருவர் கேட்டார் ''தேர்வு முடிந்து விட்டதா?'' என்று. இவர் கூறினார் ''ஆமாம்! எல்லாக் கேள்விக்கும் பதில் கூறினேன். ஆனால் வேலை கிடைக்கும் போல் தோன்றவில்லை'' என்றார். ''ஏன்''? என்று கேட்டார் அடுத்தவர். ஏனென்றால் என்னிடம் எவ்வளவு நேரமாகக் கேள்வி கேட்டவர் இருக்கின்றாரே அவரும் பரீட்சைக்கு வந்தவர் தான். விளையாட்டுக்காக என்னிடம் கேள்வி கேட்டிருக்கின்றார் என்றார்.

இளசை எஸ்.சுந்தரம்

# ஜே.வி.பியின் எதிர்ப்பு நடவடிக்கைகளால் அரசு சோர்ந்துவிடப் போவதில்லை

## உள்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பி.மீண்டும் நாட்டைத் தீயிட்டுக் கொளுத்த முனைகின்றது.



நாட்டில் வன்முறைகளைத் தோற்றுவித்து தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகளைக் குழப்பி போரை ஆரம்பிக்கவே அது முயன்று வருகின்றது என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க குற்றம்சாட்டியுள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கருத்துக் கூறுகையில்,

தேவையற்ற சில விடயங்களில் தலையிட்டு நிலைமையை மேலும் சிக்கலாக்க ஜே.வி.பி.முனைந்து வருகின்றது.

அரச ஊழியர்களின் வேலை நிறுத்தப்போராட்டங்களுக்கும் ஆர்ப்பாட்டப் பேரணிகளுக்கும் பின்னணியாக ஜே.வி.பி.செயற்பட்டு வருகின்றது.

1971ஆம் ஆண்டில் ஏற்பட்ட கிளர்ச்சியைப் போன்று நாட்டில் மீண்டும் ஓர் கிளர்ச்சியை ஏற்படுத்த ஜே.வி.பி. முனைந்து வருகின்றது. ஜே.வி.பியினரின் இந்த எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது.

எவ்விதமான சவால்களையும் எதிர்கொண்டு முறியடிப்பதற்கு அரசாங்கம தயாராகவே இருக்கின்றது.

அத்துடன், நீதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவது அரசின் பொறுப்பாகும்.

ஜே.வி.பி. தொடர்ந்தும் சமாதான நடவடிக்கைகளைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்களையும், பாத யாத்திரைகளையும் நடத்தி வருகிறது.

இருப்பினும், அவர்களின் இத்தகைய நடவடிக்கைகளால் அரசு ஒருபோதும் சோர்ந்து விடப்போவதில்லை என்றும் அவர் மேலும குறிபபிட்டார். (உ-10)

# நிரந்தர சமாதானம் ஏற்பட்டாலும் செஞ்சிலுவைச் சங்கத்தின் பணி தொடரும்

## மட்டு.மாவட்ட வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டாலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகள் தொடரும என மேற்படி சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட வதிவிடப் பிரதிநிதி சிந்தியா றியற்ல தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காத்தான்குடிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைத்தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,இராணுவத்திற்கும் ,தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்தம் நிறுத்தப்பட்டு, நிரந்தர சமாதானத் தீர்வு ஏற்பட்டாலும், யுத்தகாலத்தில் காணாமல் போனவர்களைத் தேடும் பணியிலும், சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் பணியிலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தொடர்ந்தும் ஈடுபடும் .

நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் தற்போது யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டு, சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றனவேதவிர நிரந்தர சமாதானம் ஏற்படவில்லை.

போர் நிறுத்தத்திற்கும்,நிரந்தர சமாதானத் தீர்வுகளுக்கும் இடைப்பட்ட காலமே தற்போது நிலவுகிறது.

இன, மத, மொழி பேதமின்றி ஜெனிவா சாசனத்திற்கு அமைவாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் கடமையாற்றுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (தி-61)

## இராசி பலன்

01. 10. 2003

(புரட்டாதி 14,புதன்)

சஷ்டி- மு. இ. 8.16 வரை

கேட்டை- பி.இ. 3. 31 வரை

இராகுகாலம் - 12.02 - 1.32

சுபநேரம் - 4.32- 6.02

சஷ்டி விரதம்

**மேடம்**
உடல் சோர்வு, பிரயாண பயம், வீண் தொல்லை,காரிய தாமதம்.

**இடபம்**
அபூர்வ சந்திப்பு, செல்வாக்கு,முயற்சி கைகூடும், புதிய பொருள் சேர்க்கை.

**மிதுனம்**
பகைவரால் நன்மை, பணவருவாய், திடீர் பயணம், சுவாரஸ்யம்.

**கடகம்**
வியாபார நன்மை, குடும்பக்கவலை, முயற்சி தாமதம், புத்தி சாதுரியம்.

**சிங்கம்**
கல்வியில் ஆர்வம், மதர் நட்பு, பயந்த சுபாவம், ரோக பயம்.

**கன்னி**
அன்னியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, இனிய சம்பவம், காரியசித்தி.

**துலாம்**
கௌரவக்குறைவு, எடுத்த காரியம் தாமதமாகும், வாய்த்தர்க்கம், அதிக செலவு.

**விருச்சிகம்**
பெரியோர் ஆசி, நல்ல முயற்சி, சயன சுகம், பொருள் சேர்க்கை.

**தனுசு**
பதாசிந்தை, கோபப்படுதல், பிரயாணம், தொழில்கஷ்டம்

**மகரம்**
தெய்வ தரிசனம், பெருமையடைதல், செய்தொழில் முன்னேற்றம்,முயற்சி பலிதம்.

**கும்பம்**
கடின உழைப்பு சுப நிகழ்வு, பிறரது ஒத்துழைப்பு, நல்ல செய்தி.

**மீனம்**
புதிய திட்டமிடல், வயிற்றுவலி, உறவினர் சந்திப்பு, வீண் பயம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# வெலிக்கடைச் சிறையில் 6தொலைபேசிகள் மீட்பு

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனை நடவடிக்கையின் போது அங்கிருந்து 6 கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன.

இச் சிறைச்சாலையில் இவ்வாறு நடத்தப்பட்ட திடீர்சோதனைகளை அடுத்து, இதுவரை 30 கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இத் தொலைபேசிகள் அனைத்தும் குறிப்பிட்ட சில கைதிகளிடம் இருந்தே கைப்பற்றப்பட்டதாக சிறைச்சாலை ஆணையாளர் புறூம் மர்சூத் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில்,கைதிகளுக்கு இத்தொலைபேசிகளை வழங்க உதவிய சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இத்தேடுதல் நடவடிக்கையின் போது கைதிகளிடம் இருந்து சுமார் 15 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது. (தி-61)

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# 8ஆயிரம் குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவு

(மருதங்கேணி)

கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களில் மீளக்குடியேறியவர்களுக்கு 25ஆயிரம் ரூபா மீள் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 8ஆயிரம் குடும்பங்களுக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 ஆயிரத்து 880 குடும்பங்களுக்கும் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை,கிளிநொச்சி மாவட்டத்திற்கு 148 .6 மில்லியன் ரூபாவும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 19.5 மில்லியன் ரூபாவும் மீள் குடியமர்வுக் கொடுப்பனவாக வழங்கத் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. (உ-35)

## தேவைகளை நிறைவேற்றக்கோரி

# எதிர்க்கட்சியின் ஏற்பாட்டில் கதிர்காமத்தில் பிரார்த்தனை

(கொழும்பு)

ஐக்கியதேசிய முன்னணி அரசுக்கு மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் எண்ணம் உருவாகவேண்டும் என கதிர்காமத்தில் கடந்த ஞாயிறன்று இரவு விசேட பிரார்த்தனை இடம்பெற்றது.

எதிர்க்கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்பிரார்த்தனை நிகழ்வில் நூற்றுக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

இப்பிரார்த்தனையை அடுத்து, அங்கு எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முறையற்ற ஆட்சி காரணமாக நாட்டு மக்கள் பல்வேறு சிக்கல்களை அனுபவித்து வருகின்றனர்.

விவசாயிகள் தமது உற்பத்திகளை விற்பனை செய்ய முடியாதுள்ளதுடன், அரசாங்க உத்தியோகத்தர்கள் வாழ்க்கைச்செலவு அதிகரிப்பினால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தி-61)

# செய்தித் துளிகள்

## பஸ் தரிப்பிடம் இல்லை மாணவர்கள்சிரமம்

(மணகும்பான்)

மணகும்பானில் பஸ்தரிப்பு நிலையம் இல்லாமையால் இப் பகுதிமக்கள் மற்றும் மாணவர்கள் பெரும் சிரமமடைந்து வருகின்றனர்.

பிரதான வீதியில் நீண்டநேரம் மழை, வெயில் என்பவற்றின் மத்தியில் காத்து நின்றே இவர்கள் பயணம்செய்து வருகின்றனர்.

இதனால் மாணவர்கள் அடிக்கடி நோய்த்தாக்கத்திற்குட்பட்டு பாடசாலைக்குச் செல்ல முடியாதநிலை ஏற்பட்டு வருகின்றது. (உ-56)

## மருதங்குளத்தில் மீள் குடியமர்வு துரிதம்

(மருதங்கேணி)

ஓமந்தைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மருதங்குளம் மற்றும் நாம்பன் குளம் கிராம அலுவலர் பிரிவுகளில் வெடி பொருட்கள் அகற்றப்பட்டதற்கான உறுதிப் பத்திரத்தை சுவிஸ்லாந்து நாட்டுக் கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் வழங்கியுள்ளது.

இதனை அடுத்து மேற்படி பகுதிகளில் மக்கள் துரித கதியில் மீளக் குடியேறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் மேற்படி கிராமங்களின் உள்வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதுடன், மீளக் குடியேறும் மக்களுக்கான அடிப்படை வசதிகளை சேவாலங்கா நிறுவனம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-35)

## சங்கீதசபை பரீட்சையில் 4884பேர் சித்தி

(யாழ்ப்பாணம்)

வட-இலங்கைச் சங்கீதசபைத் தேர்வு நாடிகளுக்கானபரீட்சை முடிவுகள் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வட-இலங்கை சங்கீதசபைத் தலைவரும் யாழ். வலயக் கல்விப்பணிப்பாளருமான ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைக்கு 8ஆயிரத்து 16பேர் விண்ணப்பித்த போதிலும் 5ஆயிரத்து 845பேர் மட்டுமே தோற்றியிருந்தனர்.

இவர்களில் 4ஆயிரத்து 884பேர் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(உ)

## மாட்டிறைச்சிக் கழிவுகளால் சுகாதாரச்சீர்கேடு

(மண்கும்பான்)

கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து கண்ட கண்ட இடங்களில் வைத்து இறைச்சிக்காக வெட்டும் சம்பவங்கள் மண்கும்பான் பகுதியில் அதிகரித்துள்ளன.

இடப்பெயர்வுக் காலத்தில் இப் பகுதி மக்களால் கைவிடப்பட்டுச் சென்ற மாடுகள் தற்போது பெருக்கமடைந்து கண்டபாட்டில் உலவித் திரிகின்றன.

சிலர் இவற்றைப்பிடித்து வெட்டி இரவு நேரத்தில் ஏனைய இடங்களுக்கு விற்பனைக்காக அனுப்பி வருகின்றனர்.

அத்துடன், மாட்டிறைச்சிக் கழிவுகள் ஆங்காங்கே வீசப்படுவதால் சுகாதாரச் சீர்கேடு நிலவி வருவதும் குறிப்பிடத்தக்கது.

(உ-56)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் 93ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் மாதம் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(உ)

## புதிர்ப் போட்டி

(வடலியடைப்பு)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான கணித விஞ்ஞானபாட புதிர்ப் போட்டி இன்று புதன்கிழமை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே இடம்பெற்ற எழுத்துப்பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை இப் போட்டியில் தவறாது பங்குபற்றுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (உ-61)

## ச.ச.நிலையப் பணிகள் விஸ்தரிப்பு

(வல்வெட்டித்துறை)

உடுப்பிட்டி சனசமூக நிலையப் பணிகள் தற்போது விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் அறிவுத் தேடலுக்கும், பரீட்சைக்குத் தயாாபடுததலுக்கும் இச் சனசமூக நிலைய நூல்நிலையம் மூலம் வழிவகை செய்யப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-27)

## கைக்குண்டு வீச்சு

(கொழும்பு)

கல்கிசை மாநகரசபை எதிர்க்கட்சித் தலைவர் சேகரலால் குணசேகரவின் வீட்டின் மீது நேற்று முன்தினம் நள்ளிரவு கைக்குண்டு ஒன்று வீசப்பட்டுள்ளது.

கல்கிசை டி.சேரன் வீதியில் உள்ள அவரது வீட்டிற்கு இரு வானகளில் வந்த இனந்தெரியாத நபர்களே கைக்குண்டை வீசியதாக தெஹிவளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் உயிர்ச் சேதமோ அன்றி பொருள் சேதங்களோ ஏற்படவில்லை. (தி-61)

## சர்வதேச நல்லொழுக்க தினம்

(வடலியடைப்பு)

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழக அனுசரணையுடன் வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் சர்வதேச நல்லொழுக்க தின நிகழ்வு எதிர்வரும் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் சி.ராசலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக இளைப்பாறிய மாவட்ட நீதிபதி எம்.திருநாவுக்கரசு, சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் ச.கைலாசநாதன், யாழ்.தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் தி.சிவதட்சணாமூர்த்தி, யாழ்.தொழில் திணைக்கள சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தர் பி.அ.துரைசிங்கம ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(உ-21)

## உறக்கத்தில் இருந்தவரை பாம்பு தீண்டியது

(மருதங்கேணி)

பூநகரிப்பகுதியில் உள்ள வீடொன்றில் இரவுநேரம் உறங்கிக்கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் பாம்புக்கடிக்கு உள்ளான நிலையில் சிகிச்சைக்காக கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் மட்டுவில் நாட்டைச்சேர்ந்த நல்லையா பேரின்பராசா(வயது 31)என்பவரே பாம்புக்கடிக்கு உள்ளானவராவார்.

அண்மைக் காலமாகப் பாம்புக்கடிக்கு இலக்காகி கிளி.மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுபவர்களின் தொகை சடுதியாக அதிகரித்துள்ளமை வைததியசாலைப் புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. (உ-35)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சுற்றாடல் இயற்கைவள அமைச்சில் ''விளம்பர அதிகாரி'' பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பதவிக்கு 18 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் வெகுஜன ஊடகவியல்துறையில் பட்டம் பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான விண்ணப்பங்களை அடுத்தமாதம் 27ஆம் திகதிக்கு முன்னர் 'செயலாளர், சுற்றாடல் இயற்கை வளங்கள் அமைச்சு இல.82, சம்பத்பாய ரஜமல்வத்த வீதி, பத்திரமுல்ல' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

* * *

இந்துசமய கலாசாரத் திணைக்களத்தில் ஆராய்ச்சி அலுவலர் (தமிழ்)பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதிக்கு முன்னதாக 'பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,இல.248 1/1 காலி வீதி, கொழும்பு-04' எனும் முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(உ-18)

## மேல்மாகாண வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

மேல்மாகாண சபையின் அடுத்த வருடத்திற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தை முதலமைச்சர் றெஜிநோல்ட் குரே நேற்று முன்தினம் சமர்ப்பித்துள்ளார்.

இது தொடர்பான விவாதம் ஸ்ரீஜெயவர்த்தனபுர கோட்டையில் இம் மாகாண சபைக்கென அமைக்கப்பட்ட கட்டடத்தில் அடுத்தமாதம் 17ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதிவரையும், பின்னர் நவம்பர் மாதம் 24ஆம் திகதியும் நடைபெறவுள்ளது. (தி-60)

## போதைப்பொருள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

முல்லேரியாவில் 5கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த ஞாயிறன்று மாலை முல்லேரியப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே இப் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பொலிஸார் இரண்டு பேரை கைதுசெய்துள்ளதுடன், அவர்களிடம இருந்து 6இலட்சம் ரூபா ரொக்கப் பணத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

(தி-60)

## பட்டப்பகலில் திருட்டு

(வடலியடைப்பு)

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வீதியில் உள்ள வீடொன்றில் பட்டப்பகலில் புகுந்த திருடர்கள் அங்கிருந்து தங்க நகைகள் உள்ளிட்ட பல பெறுமதியான பொருட்களை திருடிச் சென்றுள்ளனர்.

வன்னியில் இருந்து தற்போது மீளக்குடியமர்ந்துள்ள து.சசிகரன் என்பவரின் வீட்டிலேயே கடந்த ஞாயிறன்று இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று வீட்டில் எவரும் இருக்கவில்லை என்றும் இதனைச் சாதகமாக்கிய திருடர்கள் அங்கிருந்த தங்க நகைகள், 40 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் மற்றும் பெறுமதிவாய்ந்த பொருட்களைத் திருடிச்சென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

(உ-21)

# இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் புத்தெழுச்சி

பங்களாதேஷ் அணிக்கெதிராக இம்மாதம் ஆரம்பமாகவிருக்கின்ற இங்கிலாந்து கிரிக்கெற் அணியின் சுற்றுப் பயணத்தில் அவ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் றிச்சாட் ஜோனசனுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து அணியில் இடம் பெற்றிருந்த வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்ரசனின் முழங்கால் உபாதை குணமடைந்திருப்பதையடுத்தே இவர் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

21 வயதுடைய றிச்சாட் ஜோன்சன் கடந்த வருடம் சிம்பாவே அணியுடனான போட்டியின் மூலம் தனது டெஸ்ட் வாழ்வை ஆரம்பித்தார். இந்தப் போட்டியின் போது இவர் 6 விக்கெற்றுக்களைக் கைப்பற்றியிருந்தார். எனினும், இவருக்கு முழங்காலில் ஏற்பட்ட உபாதை காரணமாக அடுத்த போட்டிகளில் இருந்து நீக்கப்பட்டிருந்தார்.

தற்போது பூரண சுகமடைந்துள்ள றிச்சாட் ஜோன்சன் தனக்கு பங்களாதேஷ் அணிக்கெதிரான போட்டியில் இங்கிலாந்து அணியில் விளையாட இடம் அளித்திருப்பது பற்றி தான் மிகுந்த மகிழ்ச்சியடைந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகளின் போது தனது திறமைகளை சிறப்பாக வெளிக்காட்டி தொடர்ந்தும் இங்கிலாந்து அணியில் இடம்பெறப் போவதாகவும் நம்பிக்கை வெளியிட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து, பங்களாதேஷ் அணிகளுக்கெதிரான போட்டித் தொடர் இம்மாதம் 12ஆம் திகதி முதல் எதிர்வரும் 12ஆம் திகதி வரை இடம்பெறவிருக்கின்றது.

(உ 68)

# ஜேர்மன் கார்ப்பந்தயத்தில் மைக்கல் சூமாக்கர் வெற்றி

யூ.எஸ்.கொல்பே கார்ப் பந்தயத்தில் ஜேர்மனியின் கார்ப் பந்தைய வீரர் மைக்கல் சூமாக்கர் வெற்றி பெற்றுள்ளார். இந்த வெற்றியினை அடுத்து மைக்கல் சூமாக்கர் உலக கார்ப்பந்தய சம்பியன் பட்டத்தைத் தொடர்ந்தும் 6வது தடவையாகக் கைப்பற்றுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுளளது.

சீரற்ற காலநிலைகளுக்கு மத்தியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இன்சியானா பெர்லீசில் நடைபெற்ற இந்தக் கார்ப்பந்தயப் போட்டி மைக்கல் சூமாக்கர் முதலிடத்தினைப் பெற்றுக்கொண்டமை அவரது திறமைக்குச் சான்றுதாரம் என்று கார்ப் பந்தைய இரசிகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த வெற்றியை அடுத்து, அடுத்தமாதம் ஜப்பானில் இடம்பெறவிருக்கின்ற ஜப்பானிய க்ரொன்பிறீ போட்டிகளின் போது ஒரு புள்ளியை மாத்திரமே பெற்றுக்கொண்டாலும் உலகக் கார்ப்பந்தய வீரருக்கான சம்பியன் பட்டம் மைக்கல் சூமாக்கருக்குக் கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.(உ-06)




# கறுப்பின புரட்சிப் புயல் 76 வது வயதில் ஓய்ந்தது

விளையாட்டு உலகில் நிற வேறுபாடுகளை உடைத்தெறிந்த வீராங்கனைகளில் ஒருவரான அல்தியா கிப்சன் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

76 வயது நிரம்பிய அல்தியா கிப்சன், தனது டெனிஸ் வாழ்வில் விம்பில்டன் உட்பட 3 கிரான்சலாம் பட்டங்களை வென்றெடுத்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

டெனிஸ் விளையாட்டு உலகில் மிகவும் உயரிய போட்டி நிகழ்வுகளாகக் கருதப்படுகின்ற விம்பில்டன் மற்றும் அமெரிக்கப் பகிரங்க டெனிஸ் போட்டிகளில் பட்டம் வென்றிருப்பதுடன், இப் போட்டிகளில் பங்குபறறிய முதல் கறுப்பினத்தைச் சேர்ந்த வீராங்கனை என்ற பெருமையையும் இவர் பெற்றிருக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (உ-68)

# களத்தில் வெற்றிகளைக் குவிக்கும் இலங்கை இளம் வீரர்கள்

இலங்கை மற்றும் பாகிஸ்தான் ஆகிய வளர்ந்துவரும் கிரிக்கெற் அணிகளுக்கிடையிலான கிரிக்கெற் போட்டி நேற்று முன்தினம் கொழும்பு பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் இலங்கை அணி பாகிஸ்தான் அணியை 94 ஓட்டங்களால் வெற்றி கொண்டுள்ளது.

50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட இவ் ஒருநாள் கிரிக்கெற் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி தனது 50 ஓவர் முடிவில் எட்டு விக்கெற்றுக்களை இழந்து 251 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் இலங்கை அணி சார்பாக பார்ணவிதாரன 84 ஓட்டங்களையும் கஜ நாயக்க 40 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுததனர். பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக யுனைட்சியா 41 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3விக்கெற்றுக்களைக் கைப்பற்றினார்.

பின்னர் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 36.2ஓவர் முடிவில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 157 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டனர். இதில் பாகிஸ்தான் அணி சார்பாக உஸ்மான்தரிக் 76ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் இலங்கை அணிசார்பாக லஷ்திய 30ஓட்டங்களுக்கு 4 விக்கெற்றுக்களைக் கைப்பற்றினார்.

இதேவேளை இப் போட்டித் தொடரில் விளையாடிய இலங்கை அணி, இந்திய மற்றும் பாகிஸ்தான் அணிகளுடனான இரு போட்டிகளிலும் வெற்றிபெற்று முன்னணியில் திகழ்கின்றது. பாகிஸ்தான் இந்தியாவுடனான போட்டியில் மட்டும் வெற்றி பெற்றுள்ளது. ஆனால் இந்திய அணி தான் விளையாடிய இரண்டு போட்டிகளிலும் தோல்வியைத் தழுவியுள்ளது.

(உ-68)

எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார் பிழைத் தொழுகுவார் – குறள்

வலம்புரி

## சிறுவர், முதியோரை பாதுகாப்போம்

சிறுவர் இத்தேசத்தின் செல்வங்கள்.எதிர்காலத்தில்இந் நாட்டை வழிப்படுத்தப் போகும் சிற்பிகள். அவர்களின் உருவாக்கத்திலேயே நாட்டின் எதிர்காலம் தங்கி உள்ளது.

சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கத் தவறின் அதன் விளைவு ஒரு நாட்டின் அடித்தளத்தையே பாதிப்பதாக அமையும். இதன் காரணமாகவே சிறுவர் பாதுகாப்பு அமைப்புகள், சிறுவர்களின் உரிமைகள் பற்றி பிரசாரங்களையும் அறிவுறுத்தல்களையும் வழங்கி வருகின்றன.

பெரியவர்கள் தங்களின் மனஅழுத்தங்களை-வேலைப் பளுக்களை சிறுவர்கள் மீது திணிக்கின்றபோது அந்தப் பிஞ்சு உள்ளங்களின் மனம் வரண்டு போகின்றது.இதன் காரணமாக மன விரக்தி- கோபம்-அசட்டை-பழிவாங்கும் தன்மை போன்ற குற்றங்கள் சிறுவர்களை ஆக்கிரமிக்க அவர்கள் வளர்ந்து சமூக விரோத செயல்களில் ஈடுபட ஏதுவாகிறது.

கோபத்தோடு வளர்கின்ற பிள்ளைகளிடம் பழிவாங்கும் வக்கிரம் மிகுந்து காணப்படும் என்ற ஆய்வுகள் தரும் உண்மைகளை பெரியவர்கள் தெரிந்து கொண்டு அதற்கேற்றாற் போல் நடக்க வேண்டும். சிறுவர்கள் மீது அன்பு செலுத்தும் போது அவர்களும் அன்பு, பாசம், நேசம் என்ற கட்டுப்பாட்டுக்குள் அகப்பட்டு இரக்கம், ஜீவகாருண்யம், ஈகை போன்ற நற்குணங்களை இயல்பாகவே பெற்றுக் கொள்வர். அதன்மூலம் ஓர் அமைதியான- பண்பொழுக்கம் மிக்க சமுதாயம் உருவாகும்.

மாறாக சிறுவர்களை வேலைகளமர்த்துவது,அவர்களை தவறான பாதையில் வழிகாட்டுவது போன்றவை மிகப் பெரிதும் கொடூரமாகும். சிறுவர்களின் பாதுகாவலர்களாக பெரியவர்கள் இருப்பார்களாயின் சிறுவர் உலகம் மகிழ்ச்சியுடன் வாழும். இதற்காக இன்றைய சர்வதேச சிறுவர் தினத்தில் பெரியவர்கள் திடசங்கற்பம் பூண வேண்டும்.

அதேவேளை எமது பெரும் சொத்துக்களான முதியோர்களைப் பராமரிக்கின்ற-அவர்களின் தேவைகளை நிறைவு செய்கின்ற மிகப் பெரிய கடமையையும் நாம் செய்யத் தவறக் கூடாது. முதியவர்களின் பட்டறிவும் அவர்களின் வாழ்த்துமே எதிர்கால சந்ததியை வாழ வைக்கும். இதனை நாம் ஒரு போதும் மறந்துவிடலாகாது. முதியவர்களை நாம் பேணத் தவறுவோமாயின் அதன் விளைவை நாம் எமது முதுமைப் பருவத்தில் அனுபவிக்க வேண்டிய நிலைமை ஏற்படுவதை தவிர்க்க முடியாது போய்விடும்.

# எதிர்காலத்தை உருவாக்கும் சிறுவர்களை இலட்சிய நோக்குடையவர்களாக்கிடுவோம்

"இன்றைய சிறுவரே நாளைய தலைவர்" என்பது பொய்யாமொழி. நாளை இந்த நாட்டையோ உலகையோ ஆளப்போகிறவர்கள்



யார்? எம் கண்முன் புத்தகம் தூக்கிப் பள்ளிசெல்லும் சிறுவர்களுள் ஒருவரன்றோ! இவர்களின் சின்னஞ் சிறிய கரங்கள் நாளைய நாட்டின் சகல சுமைகளையும் தாங்கும் வலிமைபெற்ற கரங்களாக வளரப் போகின்றன. நாமோ, எமக்கு மூத்தோரோ இன்னும் பல காலத்திற்கு இருந்து இந்த உலகை ஆண்டுகொண்டு இருக்கப் போவதில்லை. நிச்சயமாக அந்தப் பணியைச் செய்யப்போவது ஒரு சிறுவனோ சிறுமியோ தான்.

## முதியவர் கடமை

இன்று சர்வதேச சிறுவர் தினம். இத்தினத்திலே சிறுவர்களின் தேவைகள், உரிமைகள், கடமைகள் என்பவற்றை வளர்ந்தவர்களாகிய நாமும் சிந்தித்து அவற்றை அவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். அவர்களை நாட்டுப்பற்று, மொழிப்பற்று, மதப்பற்று, மனிதாபிமானம் உள்ளவர்களாக வளர்த்தெடுக்க ஆவன செய்யவேண்டும். அகம்பாவம், சுயநலம், வெளிவேடம்

## இன்று சர்வதேச சிறுவர் தினம்

என்பவற்றால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய தீங்குகளில் இருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டியது வளர்ந்த அனைவரினதும் கடமையாகும்.

கொடிது கொடிது வறுமை கொடிது, அதனிலும் கொடிது இளமையில் வறுமை என்று ஔவையார் பாடியுள்ளார். இன்று பாருங்கள் எத்தனை சிறுவர்கள் வறுமையில் வாடுகிறார்கள். உணவு, உடை, உறையுள், கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு ஆகிய அடிபபடை வசதிகளைக்கூட எட்டிப்பிடிக்க முடியாமல் எத்தனையோ சிறுவர்கள் துன்பப் படடுக்கொண்டிருக்கிறாாகள். இவர்களிலிருந்துதான் நாளைய சமுதாயம் உதிக்கப்போகிறது. மற்றத் தேவைகள் தாய் தாந்தை, பாதுகாவலர் சார்ந்தவையாயினும் கல்வித்தேவை அவர்களைப் பெரிதும் சார்ந்திருக்கவில்லை. எத்தகைய சூழ்நிலையிலும் சிறுவர்களுக்கு கல்வி அறிவு கொடுப்பதை அவர்கள் புறக்கணிக்க மாட்டார்கள். செல்வச் செழிப்பில் மிதப்போரும் கல்வி அறிவுடையோரும் தமது வளத்தில் ஒரு பகுதியை ஏழை மக்களின் கல்விக்காக ஒதுக்குவார்களாயின் எதிர்காலம் அவர்களை வாழ்த்தும்.

## உதவுதல் அவசியம்

அடுத்ததாக போர்ச் சூழலால், இடப்பெயர்வுகளால் தமது தாய் தந்தையரை இழந்து அனாதைகளாகியுள்ள சிறுவர்களைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டும். இவர்கள் அனாதை இல்லங்களிலும் உறவினர்கள் பராமரிப்பிலும் சொலலொணாத் துயர்களை அனுபவிக்கின்றனர். இவர்களுக்கு உதவ அனைத்து நல்ல உள்ளங்களும் முன்வரவேண்டும். பொருளாதார வசதியுடையோர் இவர்கள இருக்கும் இடங்களைத் தேடி அடைந்து தம்மால் இயன்ற உதவிகளைச் செய்யலாம். அவ்வாறு செய்ய முடியாதோர் இவர்களை அணுகி அவர்களின் உள்ளம் மகிழும்படி உரையாடி, சிறுவர் பாடல்களைச் சொல்லிக்கொடுத்து, அவர்களுடன் விளையாடி, அவர்களின் உளத் தேவைகளைக் கண்டறிந்து உதவ முடியும்.

## சர்வதேச சிறுவர் தினம்

இவ்வாறான சிந்தனைகளைச் செயறபடுத்தவே ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் சர்வதேச சிறுவர் நாளாக அக்டோபர் முதலாம் திகதியினை பிரகடனம் செய்துள்ளது. காட்டில் மலரும் பூக்கள் கழிவுப் பொருளாகும். காகிதங்கள், மண்ணில் ஆக்கிய பொம்மைகள், மரத்தில் கட்டிய ஊஞ்சல் என்பன சிறுவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். இவற்றையாவது இன்றைய சிறுவர்களுக்குக் கிடைக்க வழிசெய்ய வேண்டியது வளர்ந்தோரின் கடமையாகும். ஒவ்வொரு சிறுவனையும்-சிறுமியையும் நாம் மகிழ்விக்கும் போது அது அவர்கள் மனதில் ஆழமாகப் பதிந்து நாம் முதியோராகும் போது எம்மைக் கௌரவிக்கும்படி வைக்கும். இதனை ஒவ்வொரு இளைஞனும்- யுவதியும் மனதில் நிறுத்திக்கொள்ள வேண்டியது அவசியம். □



சி. ஜெயகணேசன்
ஆசிரியர்

## சவுதி அரேபியாவில்

# நிர்க்கதி நிலையிலுள்ளவர்களை தாயகம் அழைத்துவர ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கையில் இருந்து வேலை வாய்ப்புத்தேடி சவூதி அரேபியாவுக்குச் சென்று அங்கு அனாதரவான நிலையில் ரியாத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தில் தஞ்சம் அடைந்துள்ள பெண்களை மீண்டும் தாயகம் அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக ரியாத்தில் உள்ள இலங்கைத் தூதுவராலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த 47 பெண்களில் 18 பேர் கடந்த 23ஆம் திகதி தாயகத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

அத்துடன், அடுத்த கட்டமாக அங்கு எஞ்சியுள்ள மிகுதி 29 பெண்களையும் இங்கு அழைத்து வருதற்குரிய ஏற்பாடுகளை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் துரித கதியில் மேற்கொண்டு வருவதாக பணியகத்தின் தலைவர் சுஸந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ரியாத்தில் இருந்து மேற்படி பெண்களை மீண்டும் தாயகம் அழைத்து வருவதற்கு ஒவ்வொருவருக்கும் தலா 22 ஆயிரத்து 500ரூபா செலவாகிறது என்றும், அவர்கள் யாவரையும் இங்கு அழைத்து வருவதற்குரிய அனைத்துச் செலவுகளையும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமே பொறுப் பேற்று நடத்துகிறது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(உ-18)

## தினசரி தியானம்

### பொறுமை

இப்புதுமையான உலகில் நேர்மையானவர்கள் துன்புறுகிறார்கள். பொல்லாதவர்கள் செழிப்படைகிறார்கள். ஆகவே, இவ்வுலகம் தலைகீழ் விகிதத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உணருங்கள். மனிதன் இயற்கையாகவே அவசரப்படுகின்றவன். உடனடியான பலன்களை எதிர்பார்க்கின்றவன். ஆன்மீக இராச்சியத்தில் பலன்கள் உடனடியாக வரமாட்டா. பெரும்பாலும் அவை வெளியில் தெரியமாட்டா. பொறுத்திருந்து ஆன்மீகப் பலன்களைப் பெறுங்கள்.

சுவாமி சிவானந்தர்

## விழிப்புலன் இழந்தோருக்கான

# தேசிய மட்ட சிறுகதைப்போட்டியில் வன்னி மாணவர்கள் இருவர் வெற்றி

(மருதங்கேணி)

விழிப்புலன் வலுவிழந்தோருக்காக சமூக நலத்துறை அமைச்சினால் தேசிய றிதியில் நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் வள்ளிபுனம் இனியவாழ்வு இல்லத்தைச் சேர்ந்த இருவர் பரிசில் பெற்றுள்ளனர்.

மேற்படி போட்டியில் இவ் இனிய வாழ்வு இல்லத்தைச் சேர்ந்த முறறாகப் பார்வை வலுவிழந்தவர்களான ப.இராஜகுமார் 2ஆம் இடத்தையும், இ.இராசகுமார் 4ஆம் இடத்தையும் தேசிய ரீதியில் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பரிசில் கடந்த 23ஆம் திகதி இசுறுபாயவிலுள்ள மேற்படி அமைச்சின் செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இதேவேளை, முதற் தடவையாக வன்னிப் பகுதி மாணவர்களும் இப் போட்டியில் இணைத்துக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(உ-35)

# மீளக் குடியமர்ந்தோருக்கு மூவிமெண்டோ உதவி

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மாமுனை தொடக்கம் போக்கறுப்பு வரையிலான 9 கிராமஅலுவலர் பிரிவுகளிலும் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு பலவிதமான உதவிகளைச செய்வதற்கு மூவிமெண்டோ நிறுவனம் முன்வந்துள்ளது.

கோழிவளர்ப்பு, விதைநெல், உரம் வழங்கல், மரக்கறி விதைகள வழங்கல், மலசலகூடங்கள், பொதுக் கிணறுகள் அமைத்தல் போன்ற உதவிகளே மீள்குடியமர்ந்த மக்களுக்குச் செய்யப்படவுள்ளன.

இதற்கான பயனாளிகளைத தெரிவுசெய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

அடுத்தமாத முற்பகுதியில் இவ் உதவிகள் வழங்கப்படவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-35)

# பல வருடங்களாக பூஜை வழிபாடின்றி வலி. வடக்கில் 180 வணக்கத் தலங்கள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கில் உள்ள அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் 180 வணக்கத் தலங்கள் கடந்த 13 வருடங்களாகப் பூஜைகள் மற்றும் புனர்நிர்மாணங்கள் அற்ற நிலையில் இருந்து வருகின்றன.

இத் தொகையில் 172 இந்து ஆலயங்களும், ஆறு கிறிஸ்தவ தேவாலயங்களும், இரண்டு பௌத்த விகாரைகளும் உள்ளடங்கி உள்ளன.

இதேவேளை, அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம், கீரிமலை நகுலேஸ்வரம் போன்றவற்றின் புனரமைப்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் அறியப் படுகின்றது.(உ-16)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சமூக செயற்பாட்டு மையத்தின் அனுசரணையுடன் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு நடாத்திய கலாசார நிகழ்வுப் போட்டியின் பரிசளிப்பு விழா இன்று நடைபெறவுள்ளது.

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் இணைத் தலைவர் வைத்திய கலாநிதி ஆர்.சுரேந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் எஸ்.பத்மநாதன கலந்து கொள்ளவுள்ளார்.

வரவேற்புரையினை சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் வி.நிசாந்தனும், சிறப்புரையினை யாழ். பல்கலைக்கழக உள மருத்துவத்துறைப் பேராசிரியர் டி.சோமசுந்தரமும் ஆற்றவுள்ளனர். (ந-5)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படவுள்ள உயர் தேசிய கணக்கியல டிப்ளோமா 4ஆம் ஆண்டு மற்றும் ஆங்கிலம் சம்பந்தமான தேசிய டிப்ளோமா 2ஆம் ஆண்டு பாடநெறிகளுக்கான இறுதிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரபபட்டுள்ளன.

மேற்படி பரீட்சை மற்றும் மீள் பரீட்சை ஆகியவற்றிற்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் யாழ். உயர் தொழிநுட்ப நிறுவனத்தில் சமர்ப்பிக்குமாறு நிறுவனத்தின் இயக்குநர் த.இராஜரட்ணம் கேட்டுள்ளார். (உ-16)

## நீராவியடியில் மருத்துவ பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு இன்று வண்ணார்பண்ணை பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.பி. ஆறுமுகதாசனின் ஏற்பாட்டில் நீராவியடி சைவபரிபாலன சபை மண்டபத்தில் முதியோருக்கான சலப் பரிசோதனையும், உயர் குருதியமுக்கப் பரிசோதனையும் மேற்கொள்ளப் படவுள்ளது.

தொடர்ந்து முதியோரைக் கனம் பண்ணுவோம் என்ற தலைப்பில் கருத்துரையும் இடம்பெறவுள்ளது. (ந-5)

## யாழ்.குடாநாட்டு மின்சாரம் புதிய நிறுவனத்திடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு மக்களுக்குத் தேவையான மின்சாரத்தை வழங்கும் பொறுப்பை நேற்று நள்ளிரவு 12 மணி முதல் அக்கிறிக்கோ நிறுவனம் பொறுப்பேற்றுள்ளதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

20 மெகாவாட்ஸ் வலுவுள்ள மினசாரத்தை குடாநாட்டு மக்களுக்கு புதிய நிறுவனமான அக்கிறிக்கோ தொடர்ந்து வழங்குமெனவும், இதன் மூலம் காரைநகர், தென்மராட்சிப் பகுதிகளுக்கும் 24 மணி நேர மின்சாரத்தை வழங்கவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(வ)

## தமிழகத்தில் கைது

(சென்னை)

தமிழகத்திலிருந்து யாழ்ப்பாணம் வருவதற்கு தயாராக இருந்த 11 இலங்கை அகதிகளை தமிழகப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று அதிகாலை இராமேஸ்வரத்திலிருந்து படகு மூலம் யாழ்ப்பாணம் வருவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 11 பேரும் அவர்கள் தங்கியிருந்த அகதிமுகாமில் மீண்டும் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனத் தமிழக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-5)

## சிறுவர்கள் நிகழ்வு

சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ். திருமறைக் கலாமன்ற கலைக கூடச சிறார்களும் இளவாலை திருமறைக்கலாமன்ற சிறுவர்களும் இணைந்து நடாத்தும் சிறார்களை மகிழ்விக்கும் நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு இளவாலை திருமறைக் கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ந-5)

## உதைபந்தாட்டம்

யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்திய உதைபந்தாட்ட இறுதிச் சுற்றுப் போட்டிகள் இன்றுமுதல் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றன.

இன்று நடைபெறவுள்ள போட்டிகளின் விபரம் வருமாறு:-

★ மாலை 4 மணிக்கு கலைவாணி வி.க. எதிர் எவரஸ்ட் வி.க.

★ மாலை 5.15 மணிக்கு சென் மேரிஸ் வி.க. எதிர் சென் அன்ரனிஸ் வி.க. (ந-5)

## பகிஷ்கரிப்பில் குதிப்பு

(கந்தர்மடம்)

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் இருந்து பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மாணவர்களை வெளியேறுமாறு கோரி அப்பாடசாலை மாணவர்கள் நேற்று முதல் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

ஆசிரிய பயிற்சிக் கல்லூரி மாணவர்கள தமது பாடசாலையில் பயிற்சி பெறுவதால், தாம் மரநிழலிலும், தற்காலிக கொட்டகைகளில் இருந்தும் கல்வி கற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் மேற்படி பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர். (ந-112)

## கருசனை அதிகமப்பா...




# புரிந்துணர்வு ஒப்பந்தம் எந்நேரமும் ரத்தாகலாம்

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே கைச்சாத்திடப்பட்டுள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையை எச்சந்தர்ப்பத்திலும் ரத்துச்செய்ய முடியும். இதனால் மிகவும் பயங்கரமான சூழ்நிலை ஏற்பட வாய்ப்புகள் உண்டு. இந்நிலையில் யுத்தநிறுத்த உடன்படிக்கையை அரசினால் மாத்திரம் கடைப்பிடிக்க முடியாது என்று அமைச்சர் பேராசிரியர் ஜ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சமாதானம் மற்றும் அரசியல் அமைப்பு நடவடிக்கைகளில் பெண்களின் பங்களிப்பு என்ற தொனிப் பொருளில் கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும்போது, அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து, உரையாற்றுகையில், தற்போது நாட்டில் நிலவும் சமாதான சூழல் இறுதியான சமாதானத் தீர்வு அல்ல என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். தற்போது யுத்தநிறுத்தம் ஒன்றே அமுலில் உள்ளது. இந்த யுத்த நிறுத்தத்தை 19 மாதங்களாகத் தொடர்ந்து அரசினால் கடைப்பிடிக்க முடிந்தது. இதனைக் கடைப்பிடிப்பது என்பது அரசினால் மட்டும் முடியாது. இதற்கு சகல தரப்பினரும் பூரண பங்களிப்பை வழங்கவேண்டும் என்றும் பீரிஸ் கூறினார். (வ)

## பிரதமர் ரணில் இந்தியா செல்வார்

(கொழும்பு)

எதிர்வரும் ஒக்ரோபர் 20ந் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா 3 நாள் விஜயத்தை மேற்கொண்டு புதுடில்லி செல்லவிருப்பதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்விஜயத்தின்போது அவர் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயை சந்திப்பார். இதன்போது இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தகம், பொருளாதார உறவுகள் பற்றியும் தற்போதைய சமாதான முயற்சிகள் பற்றியும் கலந்துரையாடவுள்ளார்.(ந)

## கடற்புலிகளின்...

நிரந்தர அங்கத்துவத்தைப் பெறும் வாய்ப்பைப் பெற முனைகின்றது என்றார்.

இந்நிகழ்வில், தெற்கு மற்றும் தெற்காசியக் கல்வி நிலையத்தின் முன்னாள் இயக்குநர் கே.சூரிய நாராயணன் கொழும்பு மஹ்ரா நிறுவனத்தின் பேராசிரியர் காமினி சந்திர நாயக்க, சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் ஆலோசகர் இக்பால் அத்தாஸ் உட்படப் பல இந்திய இலங்கைப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இலங்கையில் இரு பிரதான கடற்படைகள் உள்ளமை குறித்து இலங்கை அரசாங்கம் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டும் எனறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ள தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா இந்திய கடற் பிராந்தியத்தின் எல்லைக்குள் விடுதலைப் புலிகளின் கடற்படை நடமாட எக்காரணம் கொண்டும் அனுமதி வழங்கப்படமாட்டாது என உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், 65 மில்லியன் மக்கள் வாழ்ந்துவரும் தமிழ்நாட்டில் கூட தனியான கடற்படை எதுவும் இல்லாத நிலையில் 17 மில்லியன் மக்கள் வாழும் இலங்கையில் இருவேறு கடற்படைகள் அவசியம்தானா என்று கேள்வி எழுப்பியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-10)

## திட்டவரைபை...

நாட்டின் அபிவிருத்திக்குக் கிடைக்கும் நிதியுதவி வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு மாத்திரம் அல்லாது, நாட்டின் சகல பகுதிகளுக்கும் அதுபயன்படுத்தப்பட வேண்டும். அதனடிப்படையில் நோர்வே அரசு கடற்றொழில், சுகாதாரம் போன்ற துறைகளை விருத்தி செய்ய உதவி வழங்கும் என்று கூறிய தூதுவர், மத்திய கலாசார நிலையத்திற்கு நோர்வே ஒருகோடிக்கும் அதிகமான நிதியை நன்கொடையாக வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். (ம)

## இடைக்கால...

அரசு உட்படச் சர்வதேச சமூகத்திற்கு விடுத்து வருகின்றனர்.

இத்தகைய அமைப்புக்கள் தங்களின் கோரிக்கையை மகஜர்கள் மூலம் அனுப்பிவைக்கும் துரித நடவடிக்கையில் இறங்கியுள்ளன.

இதேவேளை, தமிழ்மக்களின் அபிலாசையை நிறைவேற்றக்கூடிய அதிகாரமுள்ள இடைக்கால சபையை எற்றுக்கொள்ளுமாறு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடமும் தமிழ் மக்கள் கோரிக்கை விடுத்து வருவதாகத் தெரியவருகின்றது. (ம)

ஒக்ற் – 1

**அனைத்துலக சிறுவர் தினம்!**

*–பிள்ளைகளைப் பெருமைப்படுத்துவதற்கென பிரேரிக்கப்பட்ட உலக நாள்–*

**இன்றைய தினத்தில் அனைத்துச் சிறார்களும் தங்கள் உரிமைகளை வென்று துஷ்பிரயோகங்கள் ஏதுமற்ற தூய உலகில் மன மகிழ்வுடன் வாழ வாழ்த்துவதுடன்,**

சிறுவர் மேம்பாட்டிற்காய் கைகோர்த்துப் பணிபுரிந்து வரும் சக நிறுவன்ங்கள், உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்களின் சேவையையும் பாராட்டி பெருமைப்படுத்துகின்றோம்

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:-

**மாவட்டசிறுவர் பாதுகாப்புக் குழு**

அறை இல. 30
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
T.P. 222 5657

அனுசரணை:-

சமூக செயற்பாட்டு மையம்
159, 4ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(C/6720)

## மரண அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை ஞானபூரணம்

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அந்தோனிப்பிள்ளை ஞானபூரணம் நேற்று 30.09.2003 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி யோவாம்பிள்ளை, ஞானப்பிரகாசி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஏபிரகாம், காலஞ்சென்ற மோசேஸ், தேவசகாயம், சிசிலியா, லில்லி ஆகியோரின் அன்புச் சகோதரியும், எலந்திரேசாலீலாவதி, காலஞ்சென்ற போல் குணரட்ணம், காலஞ்சென்ற எட்வேட் இராசேந்திரம், சாள்ஸ் மரியநாயகம், புஸ்பராணி, ரோஸ்மலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், வின்சன் ஜெரால்ட்அன்னப்பா, றூபிஅரியம், ஞானாபரணம் சந்திரா, இந்துராணி, ஆரோக்கியநாதன், எட்வேட் ஆகியோரின் அன்பு மாமியாரும், வின்சன்ஸ்ரனிஸ்லொஸ் றீற்றாஜெசி, தங்கராசா றொசிற்ரா ஜஸ்மின், றோய் ஜெவ்றி, றோமியோபிரின்ஸ், றெஜினோல்ட், றெமிஜியஸ், பிறேமகுமாரன் றுபினா ஜெசிக்கா, யோகேந்திரன் ஜெனிபர், றொணி, டிலோன், பேணி, றொபினா, காலஞ்சென்ற றொசான், றொகான், றோபன், துஷ்யந்தி, கிருஷாந்தி, யூட்பிராங்ளின், ஜெயசாந்தி, பேபிசாந்தி, அன்ரனி றெனோல்ட், ஜென்சன் றொனால்ட், எடின் கமிலோ ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் டொமிற்றிலா, டொறன்சி, மிலாணி, மிரின், மரின், கெலன் சிந்துமதி, அன்ரனி ரைற்ரஸ், றோமன், பபீன், லிஷா, நிசாந்தன், ஜொவ்றினா, றொபின்ஜெரால்ட், ஜொலினா, ஜெனட் இவோன், செலுமியேல, மத்தியூசன், உமாசுதன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.10.2003) புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு பரிசுத்த மரியன்னை பேராலயத்திற்கு திருப்பலிக்காக எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*27/9 A 1–ம் ஒழுங்கை,*
*ஈச்சமோட்டை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
பிள்ளைகள்

(C/7648)

பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.10.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.